Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 15 புதன்கிழமை (01.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 336

## ...ஸல் குறிப்பிட்ட அளவில் ...நேற்று எடுத்துவரப்பட்டது

### ...த்தியாவசிய சேவை முடங்கும் நிலை நீங்கியது

யாழ்ப்பாணம்,நவ.1

...நாட்டுக்குத் தேவையான டீஸ ...றிப்பிட்ட அளவு நேற்று எடுத்து ...டதைத் தொடர்ந்து அத்தியாவ ...வகள் நேற்றுச் சீராகின.

...கையிருப்பு முடிவடைந்ததை யடுத்து போக்குவரத்து சேவை, மின்சாரம், தொலைபேசி, ஆஸ்பத்திரி மற்றும் அரச செயலகங்களின் பணிகள் முடங்கும் அபாயம் உருவாகி இருந்தது. ஆனால் அந்த நிலை நீங்கிவிட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர நுழை வாசல்களில் படையினர் பெரும் எடுப்பில் சோதனை

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.நகரப் பகுதியை நோக்கி நேற்று முற்பகல் வந்த மக்கள் நகர எல்லையில் வைத்து துருவித் துருவி விசாரணைக்கு ஆளாக்கப்பட்டனர். வாகனங்களும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நேற்றுக் காலை 9 மணியளவில் இருந்து பிற்பகல் 2 மணிவரை படையினரின் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாண நகரத்துக்குள் நுழையும் பகுதிகளான பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் பொது மக்கள் மறிக்கப்பட்டு அடையாள அட்டை சோதனை, உடற்சோதனை ஆகியவற்றுக்கு ஆளாக்கப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ...நாட்டிற்குத் தேவையான
# ...த்தியாவசிய உணவுப் பொருள்களை ...இந்தியாவிலிருந்து தருவிக்க முயற்சி

## யாழ்.வர்த்தகர்கள் தமிழ் நாட்டில் ...கொள்வனவு செய்யும் வழிமுறை ஆராய்வு

சென்னை,நவம்பர் 1

...ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களின் பற்றாக் ...றையை நீக்கும் பொருட்டு தமிழகத்தில் இருந்து வர்த்தக ரீதியில் இங்கு அவற்றைக் கொண்டு ...ம் திட்டமொன்று பரிசீலனையில் உள்ளதாக அறியவருகிறது.

...து குறித்து இந்திய அரசு கொழும்பு அரசுடன் தொடர்புகொண்டுள்ளதாக தகவல்கள் ...ரியாகியுள்ளன.

...தியா சென்றிருந்த தமிழ்த் தேசியக் ...ட்டமைப்பினர் குடாநாட்டு மக்களுக்கு ...ப் பொருள்களை அனுப்பி, மக்க ...ட்டினியைப்போக்க வேண்டும் ...கேட்டிருந்தன.

...ன் பெறுபேறாக யாழ்ப்பாணத்து ...ர்கள் தமிழகத்தில் உணவுப் பொருள்களை வர்த்தக முறையில் கொள்வனவு செய்து குடாநாட்டுக்கு எடுத்துவந்து, வழங்கும் திட்டம் குறித்து இப்போது இந்தியத் தரப்பில் ஆராயப்பட்டு வருவதாக சென்னையில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டுக்கு உணவுப் பொருள்களை தமிழகத்திலிருந்து அனுப்புவதற்கு இந்திய அரச மட்டத்தில் விருப்பம் இருந்தாலும் கொழும்பு அரசாங்கம் பாதக உணர்ச்சி நிலையில் இருப்பதால்-

அரசாங்கத்திற்கு - அரசாங்கம் என்ற வகையில் உணவுப் பொருள்களைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பூவரசங்குளத்தில் கிளைமோர்; சிப்பாய் மரணம், மூவர் காயம்

வவுனியா, நவ.1

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மூன்று படையினர் காயமடைந்தனர். பூவரசங்குளம் - செட்டிக்குளம் வீதியில் ரண்க்த்கம சந்திப்பகுதியில் நேற்றுக்காலை 8.45மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த படையினர் மூவரும் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். இதனை அடுத்து அவர் ஹெலி மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார். (க-164)

## ...ன் விநியோகம் ...ளவு சீரானது

...ழ்ப்பாணம், நவ.1

...ட்டில் மின்சார விநியோகம் ...ளவு சீராகியது.

...கையிருப்புக்கிடைத்ததையடுத்து ...யாகத்தை ஓரளவு சீராக்க முடிந்த ...சபை வட்டாரங்கள் உதய...

(10ஆம் பக்கம் பார்க்க)

## ...குளப்பகுதியில் ...ருவித் தாக்குதல் ...வர் உயிரிழப்பு

கொழும்பு, நவ.1

...டக்களப்பு, மிராங்குளம் பகுதி ...நேற்றுமுன்தினம் மாலை புலிகளின் ...பாட்டுப் பகுதியில் புலிகள் பயணம் ...உழவு இயந்திரம் கிளைமோர்த் தாக்கு... இலக்காகியதில் இருவர் உயிரி...

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்களை புலிகள் நிறுத்தினால் அரசு ஏ-9 பாதையைத் திறக்குமாம்

### வரி அறவீடுகளும் இருக்கக் கூடாதாம்

கொழும்பு, நவ.1

''தமிழீழ விடுதலைப் புலிகள் ஏ-9 வீதியில் கப்பம் அறவிடுவதையும், படையினர் மீது வலிந்து தாக்குதல் நடத்துவதையும் உடனடியாக நிறுத்தினால் அரசு உடனடியாக ஏ-9 பாதையைத் திறக்கும். இவை நிறுத்தப்படாதவரை ஒருபோதும் இப்பாதை திறக்கப்படமாட்டாது.

- இவ்வாறு அமைச்சரும், அரச பேச்சுக் குழுவின் தலைவருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜெனிவாப் பேச்சின் பெறுபேறுகள்பற்றி ஊடகவியலாளர்களுக்கு விளக்கிக் கூறுகையில் தெரிவித்தார்.

அவர் இதுபற்றித் தொடர்ந்து கூறுகையில்,

ஏ-9 பாதையை அரசு உடனடியாகத் திறக்கவேண்டும் என்றொரு நிபந்தனையைப் புலிகள் ஜெனிவாப் பேச்சில் முன்வைத்தமையாலேயே பேச்சு இணக்கமின்றி முடிவடைந்தது. ஆனால், புலிகள் வன்முறைகளைக் கைவிடாதவரை, கப்பம் அறவிடுவதை நிறுத்தாதவரை அப்பாதையைத் திறக்கமாட்டோம் என நாம் புலிகளுக்கு மிகவும் தெளிவாகக் கூறிவிட்டோம்.

அரசு ஏ-9 பாதையை மூடி யாழ். மக்களை பட்டினியில் போடுகிறது எனப் புலிகள் கூறுகின்றனர். அம்மக்களை அரசிடமிருந்து பிரிக்க அவர்கள் முயற்சிசெய்கின்றனர்.

நாம் பாதையை மூடினாலும், யாழ். மாவட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் குறைவில்லாது கப்பல் மூலம் அனுப்பிவருகின்றோம். இவற்றைத் தொடர்ந்தும் தடையில்லாமல் வழங்குவதற்காக எமக்குப் புலிகள் பாதுகாப்பு உத்தரவாதத்தைத் தரவேண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ...ழ்ப்பாணத்தில் பொருள்கள் தட்டுப்பாடா? ...த்தியாவசிய சேவைகள் நாயகம் மறுப்பு

கொழும்பு, நவ. 1

...ழ். குடாநாட்டில் அத்தியாவசியப் ...ள்களுக்குத் தட்டுப்பாடு எதுவும் ...வில்லை. அங்கு தேவையான அளவு ...ள்கள் தாராளமாகக் கிடைக்கின் ...ங்கு பொருட்தட்டுப்பாடு என்று ...ாகும் செய்திகள் உண்மையில்லை. ...வாறு சில இலத்திரனியல் ஊட...டம் நேற்றுத் தெரிவித்தாராம் அத்தி... சேவைகள் ஆணையாளர் நாயகம் திவாரட்ண.

குடாநாட்டில் தற்போது உணவு மற்றும் நாளாவிதப் பொருள்கள் முற்றாகத் தீர்ந்து, மக்கள் பெரும் அவலத்தை, பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருக்கின்ற நிலையில், அங்கு எந்தப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு இல்லை என்றும் சகல பொருள்களும் சாதாரண விலைக்கே தாராளமாகக் கிடைக்கின்றன என்றும் அத்தியாவசிய.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் சேவைகள் இன்று வழமைக்குத் திரும்புகின்றன

யாழ்ப்பாணம்,நவ.1

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இன்று வழமை போல் இடம்பெறும். போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் நேற்றிரவு இத்தகவலைத் தெரிவித்தன.

டீஸல் கையிருப்பு முடிந்த காரணத்தால் போக்குவரத்து சபையின் பொது மக்களுக்கான சேவைகள் கடந்த இரு தினங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்தன.

பாடசாலை சேவைகள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்பட்டன.

போக்குவரத்து சபைக்கு நேற்று டீஸல் வழங்கப்பட்டது என்றும் -

அதனையடுத்து பஸ் சேவைகள் முழுமையாக இன்று தொடக்கம் நடைபெறும் என்றும் - போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.

(அ-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெனிவாவில் நடந்த பேச்சில் கலந்து கொள்ளச் சென்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் சூரிச் விமான நிலையத்தில் இருந்து தாயகம் நோக்கிப் புறப்படும் போது எடுக்கப்பட்ட படங்கள்.

# போக்குவரத்து சபை பஸ்களின் சேவை நேற்றும் மந்த நிலையில்

யாழ்ப்பாணம், நவ.1

குடாநாட்டில் நேற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேவைகள் மிகமிக மந்தமாகவே இருந்தன.

பஸ்களுக்கான டீசல் போதியளவில் இல்லாததாலேயே பஸ் சேவைகள் இடம் பெறவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலையில் பாடசாலைகளுக்கான பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்பட்டமையால் பாடசாலை மாணவர்களும் பெரும் பாதிப்புக்கு ஆளாகினர்.

தனியார் சிற்றூர்தி சேவைகள் கடீ சமான அளவு இடம்பெற்ற போதிலும் அவற்றில் சனநெரிசல் காணப்பட்டது.

தென்மராட்சியில் போக்குவரத்து சபைக் காலை பஸ் சேவைகளை இடைநிறுத்தியதால் உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

சில மார்க்கங்களில் பஸ் சேவை இடம் பெறாததால் அந்த மார்க்கங்களில் தனியார் சிற்றூர்தி சேவைகளும் இல்லாததால் உத்தியோகத்தர்கள் தமது கடமைக்குச் செல்ல முடியவில்லை எனவும் -

பாடசாலை மாணவர்கள் பேருந்து சேவை இல்லாததால் வீடு திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பல அலுவலகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன.

# வாழும் கலை நிலையத்துக்குச் சென்ற எதிர்க்கட்சியின் எம்.பிக்கள் குழுவினர்

## நெஞ்சில் சமாதான நிறைவோடு நாடு திரும்புகின்றனர்!

புதுடில்லி, நவ. 1

பெங்களூரிலுள்ள 'சர்வதேச வாழுங் கலை நிலைய'த்தில் நடந்த மூன்று நாள் அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆன்மீகப் பட்டறையில் பங்குபற்றிய இலங்கை எம்.பிக்கள் ஒன்பது பேர், நெஞ்சில் நிறைந்த மன அமைதி, சமாதானத்தைத் தாங்கியவாறு நாடு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வாழும் கலை' நிலையத்தின் ஆன்மீகத் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் வழிகாட்டலில் புலனடக்க ஆன் மீகப் பயிற்சி பெற்ற இந்த ஒன்பது எம்.பிமாரும், தமது வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை, ஒரு புத்தூக்கத்தைத் தாங்கள் இங்கு வந்து பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்துள்ளனர்.

ஐ.தே.கட்சி எம்.பியும், முன்னாள் அமைச்சருமான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தலைமையில் பெங்களூர் வந்து இந்த 'வாழும் கலை' வகுப்பில் கலந்து கொண்ட இவர்கள், ஆச்சிரமத்தின் அற்புதமான பல அனுபவங்களைத் தாங்கள் பெற்றதாகவும் இன, மத ஒற்றுமை இங்கு வளர்ந்து வருவதைக் கண்டதாகவும் கூறியிருக்கிறார்கள்.

ஒன்பது எம்.பிமாரும் ஐ.தே.கவைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

உடலுக்கு வலுவூட்டும் ஆயுர்வேத மூலிகை சிகிச்சைகளையும் இவர்கள் இங்கு பெற்றுள்ளனர்.

எம்.பிக்களான ரஞ்சித் மத்தும பண்டார, மஹிந்த சந்தனதிலக, சம்பிக பிரேமதாஸ, திலீப் வேதாராய்ச்சி, அகிலா காரியவசம், எட்வேர்ட் குணசேகர, சந்திரசிறி சூரியாராய்ச்சி, கயந்த கருணாதிலக ஆகியோர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா தலைமையில் பெங்களூர் சென்றிருந்தவர்களாவர்.

# பிரிவுத்துயர் எம்மைப் பெரிதும் வாட்டிய போதிலும் அங்கு தொழில் செய்தோம்; கஷ்டங்கள் எதுவுமில்லை

## வன்னியிலிருந்து திரும்பிய மீனவர்கள் செவ்வி

**அலுவலகச் செய்தியாளரும், குருநகர்ச் செய்தியாளரும்**

யாழ்ப்பாணம், நவ.1

எமது உறவுகளை விட்டு வேறொரு இடத்தில் தங்கியிருந்த பிரிவுத் துயர் எம்மை பெரிதும் வாட்டிய போதிலும்-

கிராஞ்சி பாடசாலையில் உள்ள முகாமில் நாம் இருந்த கடந்த இரண்டரை மாதங்களாக எவ்வித கஷ்டங்களும் இருக்கவில்லை.


தமிழர் புனர்வாழ்வுக் கழகம, வேள்ட் விஷன் ஆகிய தொண்டு நிறுவனங்கள் பணமாகவும் பொருளாகவும் உதவி செய்தனர்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாலாவிப் பகுதியில் கடந்த இரண்டரை மாதங்களாகத் தங்கியிருந்து தமது முயற்சியால் யாழ்ப்பாணம் - குருநகரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை தமது சொந்த வள்ளங்களுடன் வந்து சேந்தவர்கள் தெரிவித்தனர்.

அவர்களில் ஜே.குயின்ரன் (வயது-29), அ.வினோத் (வயது-24), ம.ரவீந்திரன் (வயது-46), அ.அன்ரன் (வயது-56) ஆகிய நால்வரை உதயன் செய்தியாளர்கள் செவ்வி கண்டனர். அதன் தொகுப்பு வருமாறு:

குடும்பத்தினரை விட்டுச் சென்று நீண்ட நாளாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் சூழலால் மக்கள் பலத்த கஷ்டங்களை எதிர் நோக்குகின்றார்கள் என்று தெரிந்ததால் தொழிலின் நிமித்தம் தொடர்ந்தும் பாலாவியில் தங்கியிருக்க விரும்பாத நிலையில் நாங்கள் எமது சொந்த இடங்களுக்கு திரும்பினோம்- என்றவாறு நால்வரும் தெரிவித்தனர்.

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் இருந்து தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்தின் நிலைமை பற்றியும் குடும்ப நிலைமை குறித்தும் எப்படி அறிய முடிந்தது?



**குயின்ரன்:** நாங்கள் பல தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சித்தும் கிடைக்கவில்லை. சலிக்காது 'கொமினிக்கேஷன்' நிலையங்களுக்கு சென்று முயற்சி செய்தோம். தொலைத்தொடர்பு கிடைத்த போது எமது குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு இங்குள்ள நிலைமைகளைத் தெரிந்து கொண்டோம். அதன் பின்னர் விரைவில் இங் திரும்பி வரவேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது.

**கேள்வி:** இங்கு பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுபோல் நீங்கள் இருந்த பகுதிகளிலும் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா?

**ரவீந்திரன்:** நாங்கள் கிராஞ்சி பாடசாலை முகாமில் தங்கி யிருந்தோம் எங்களை விடுதலைப்புலிகள் அங்கு தங்கவைத்து வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். வேள்ட் விஷன், தமிழர் புனர்வாழ் வுக்கழம் போன்ற தொண்டு நிறுவனங்கள் எமக்கு வேண்டிய உதவிகளை வழங்கினார்கள். பொருள்கள் தட்டுப்பட்டு இருந்ததாக நாம் உணரவில்லை.



**குயின்ரன்:** நிவாரண உதவிகள் கிடைத்தன. 3000 ரூபா தொடக்கம் 4000 ரூபா வரை தொண்டு நிறுவனங்கள் உதவியதால் எமக்கு உணவுப்பிரச்சினை இருக்கவில்லை.

**கேள்வி:** நீங்கள் 46 பேர்கள் மட்டும் வந்துள்ளீர்கள். சுமார் 150 பேர்கள் வரை அங்கு தொழிலுக்காக தங்கியிருந்ததாக அறிகிறோம். ஏனையோர் இங்கு வருவது குறித்துச் சிந்திக்கவில்லையா?

### மீன் விற்ற பணத்தை பெற்ற பின்னர் அவர்களும் திரும்பி வரலாம்.

**வினோத் (24):** அனேகர் மீன் வகைகளை வியாபாரிகளுக்கு கடனாக வழங்கியிருக்கிறார்கள். அதற்கான பணத்தை பெற்றுக்கொண்ட பின்னர் அவர்களும் திரும்பி வரலாம். மடு, பூநகரி போன்ற பகுதி களில் உள்ள வியாபாரிகளுக்கே மீன்களை நாம் விற்பதுண்டு.

**கேள்வி:** இங்கு ஒரு கிலோ அரிசி 120 ரூபாவுக்கும் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இங்கு உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு என்பதால் நீங்கள் வரும்போது அரிசி வாங்கி வந்திருப்பீர்கள்தானே?

**குயின்ரன், வினோத்:** எங்களிடம் கையில் பணம் இருக்கவில்லை. அதனால் நாங்கள் எதுவும் வாங்கிவரக் கூடியதாக இருக்கவில்லை. அங்கு அரிசி ஒரு கிலோ 27 ரூபா முதல் 29 ரூபா வரை விற்பனையாகிறது.

**கேள்வி:** பாலாவி பகுதியில் உங்களுக்குத் தொழில் செய்வதில் பிரச்சினை ஏதாவது ஏற்பட்டதுண்டா?

**ர்வீந்திரன்:** அப்படி எங்களுக்கு எதுவும் ஏற்படவில்லை. நாங்கள் கரையில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் மட்டுமே செல்கிறோம். எனினும் தொழில் நன்றாகவே நடைபெற்றது.

**கேள்வி:** நீங்கள் தங்கியிருந்த பகுதிகளில் உங்களுக்கு எந்த ஒரு பிரச்சினையும் ஏற்படவில்லை. அப்படியிருக்க நீங்கள் இங்கு வரவேண்டும் என்று நினைத்ததன் நோக்கம் என்ன?

**குயின்ரன்:** எங்களுக்கு எந்த ஒரு தரப்பிடம் இருந்தும் எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை. குடும்பத்தின் நிலையை எண்ணித்தான் நாங்கள் வரவேண்டியிருந்தது. எங்களுக்கு மீன் விற்ற வகையில் வருமதிகளும் கூட அங்கு உண்டு.

**கேள்வி:** நீங்கள் படகுகளில் வந்து கொண்டிருக்கும் போது ஷெல் வீச்சுக்கள் இடம் பெற்றதாக தெ ன்றது. அதனால் நீங்கள் அச்சமடையவி லையா?

**ரவீந்திரன்:** நாங்கள் வரும் போது ஷெல் வீச்சுக்கள் இடம் பெற்றாலும் ஒருவாறு தப்பிவிட்டோம். நாம் குருநகரை நெருங்கி வந்த போது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

**கேள்வி:** துப்பாக்கி வேட்டுக்களால் உங்களில் யாராவது காயங்களுக்கு ஆளானது குறித்து.....?

**ரவீந்திரன், குயின்ரன்:** எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. படகுகளில் தான் சிறு சேதங்கள் ஏற்பட்டன. படையினர் எமது பக்கம் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

### எமது விவரங்களைக் கேட்டறிந்த படையினர் வீடு செல்ல அனுமதித்தனர்

**கேள்வி:** நீங்கள் கரை சேர்ந்ததும் படையினர் உங்களிடம் எவ்வாறு நடந்து கொண்டனர்?

**ரவீந்திரன்:** எம்மி எமது விவரங்களை கேட்டுத் தெரிந்து கொண்டு எம்மை வீடுகளுக்குச் செல்ல அனுமதித்தனர். அத்துடன் மீனவர்களுக்கான எமது அடையாள அட்டைகளையும் திரும்பவும் ஒப்படைத் தனர்.

நாம் தொழிலுக்காக கடலுக்குச் செல்லும் போது அடையாள அட்டைகளை படையினரிடம் ஒப்படைத்துவிட்டு செல்வதே வழமை.

**கேள்வி:** உங்களது அனுபவம் குறித்து விவரிப்பீர்களா?

**அன்ரன்:** கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி தொழில் செய்வதற்காக குருநகரில் இருந்து பாலைதீவுக்குச் சென்றிருந்தோம். நாம் நண்டு வலை, டிஸ்கோ வலை மூலமே தொழில் செய்தோம். 11 ஆம் திகதி இரவு அங்கு தொழில் செய்து கொண்டிருந்த போது, யாழ்ப்பாணக் கரையோரமாக பாரிய எறிகணை வீச்சு இடம் பெறுவதைக் கேட்டோம்.

அன்று கரையை நோக்கி வந்து கொண்டிருந்த போது விடுதலைப்புலிகள் பல படகுகளில் கடலில் நடமாடினர். எம்மைக் கண்டதும் குருநகருக்கு தற்போது போகமுடியாது பாலாவிக்குச் செல்லுமாறும் கூறிச் சென்றார்கள்.

நாங்கள் உடன் பாலை தீவுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து பாலாவிக்குச் சென்றோம்.

பாலாவியில் எமக்கு தொண்டு நிறுவனம் உதவி புரிந்தது.

**கேள்வி:** உங்களுக்கு தொழில் செய்ய வாய்ப்பு இருந்ததா?

**அன்ரன்:** எம்மை அங்கு கடலில் மீன் பிடிக்க அனுமதித்தார்கள். அத்துடன் உணவுப் பொருள்களையும் அங்கு கடையில் வாங்க முடிந்தது. நாம் பிடிக்கும் மீன்களை மிகவும் மலிவாக வியாபாரிகள் பெற்றுச் சென்றார்கள். எம்மை எமது இடத்துக்கு அனுப்பி வைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கோரிய போதிலும் அவர்கள் எம்மை அனுப்பிவைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாம் தொழில் செய்யும் நாள்களில் எமக்கு வன்னியை அண்டியபகுதியில் உள்ள கடலில் சுதந்திரமாக தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது. குடாக்கடலில் கல்லடி வரை சில சமயம் நாம் தொழில் செய்ய வந்தோம்.

**கேள்வி:** நீங்கள் தொழில் செய்வதற்கும் இங்கு வருவதற்கும் எரிபொருள் பிரச்சினை இருக்கவில்லையா?

**அன்ரன்:** எமது படகின் இயந்திரத்தில் போதியளவு எரிபொருள்களைச் சேகரித்து வைத்திருந்தோம்.

வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணி அளவில் பாலாவிக் கரையில் இருந்து எமது படகுகளில் குருநகர் கடல் நோக்கி வெள்ளைக் கொடிகளுடன் வந்தோம். முகத்துவாரத்தை அடைந்தபோது படையினர் எம்மை நோக்கி எறிகணை மற்றும் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். அவை எமது படகுகளில் சிலவற்றை தாக்கின. எனினும் நாம் கொண்டு வந்த இயந்திரப் படகின் மறைவில் எமது ஏனைய பிளாஸ்ரிக் படகுகளை ஒதுக்கி குருநகர் இறங்கு துறையை வந்தடைந்தோம்.

(அ-51-111)

# தென்மராட்சியில் உளசமூக செயலமர்வு

தென்மராட்சி,நவ.1

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உள சமூக மேம்பாட்டுச் 'சீர்மியமும் வழிகாட்டலும்' என்னும் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயமும் புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனமும் இணைந்து இந்தச் செயலமர்வினை நடத்தவுள்ளன.

அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# குறுகிய சிந்தனைக்குள் தீர்வு முயற்சி

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுகள் பயன்தராமல் - பலனின்றி - முடிவுற்றுள்ள சூழ்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துக் கட்சி மாநாடு குறித்து கொழும்பில் அதிகம் பேசப்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. இதுவரை எதிரணியில் இருந்த போது இந்த அனைத்துக் கட்சி மாநாட்டைப் பகிஷ்கரித்து வந்தது. இப்போது ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பிரதான எதிர்க்கட்சிக்கும் இடையில் பொது உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதை அடுத்து, இந்த மாநாட்டில் ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்களும் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால் - இனப்பிரச்சினைக்கான தென்னிலங்கையின் தீர்வு யோசனையைத் தயாரித்து சிபார்சு செய்வதென்ற பெயரில் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்திலும் அது தொடர்பான கலந்தாலோசனைகளிலும் இரண்டு பிரதான கட்சிகளின் பிரதிநிதிகளும் முழு ஈடுபாட்டுடன் பங்குபற்றப் போகின்றார்கள் என்ற நிலை எழுந்துள்ளதால் - இவ்விவகாரம் தெற்கில் மிக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

ஆனால், இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தினால் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்கவே முடியாது என்பது தமிழர்களின் தெளிவான கணிப்பீடு.

இந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் பங்குபற்றும் பிரதிநிதிகள், அவர்களின் கருத்துகள், தீர்வுக்கு வழியாக அவர்கள் எடுத்துள்ள முன்னுதாரணங்கள், வழிகாட்டல்கள் போன்றவற்றை நோக்கும்போது அவர்களின் கலந்தாலோசனைக் கருப்பொருள் அல்லது கருத்தியல் ஒரு குறுகிய எல்லைக்குள் வரையறை செய்யப்பட்டிருப்பது அப்பட்டமாகப் புலனாகின்றது. 'குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களாக' அவர்கள் இருக்கின்றார்களே தவிர, பரந்து - விசாலமாக - சிந்திப்பவர்களாக இல்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 'இந்திய மாதிரியை' தூக்கிப் பிடித்து நிற்கிறார்கள் அவர்கள். இந்திய மாதிரியில் அதிகாரப் பரவலாக்கம் செய்வதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம் என அவர்கள் கனவு காண்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுடன் தமது அரசு 2002 - 2003 ஆம் ஆண்டுகளில் சமாதானப் பேச்சுகளை நடத்திய சமயம், "இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழர் தாயகத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு குறித்து ஆராயத் தயார்" - என்று எழுத்து மூலம் உறுதியளித்த அப்போதைய பிரதமரும், இப்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்ககூட, இந்த விடயத்தில் - முன்னைய சிங்களத் தலைவர்கள் போன்று குத்துக்கரணம் அடித்து, 'இந்திய மாதிரி'யில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து இப்போது அதிகம் பேசத்தொடங்கிவிட்டார்.

ஏன், ஐ.தே.க. - ஸ்ரீ.ல.சு.க. இடையிலான தற்போதைய பொது உடன்பாட்டின் பின்னணியில் எழுதாத இணக்கமாக - இரு கட்சிகளினதும் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க இடையிலான கருத்தியல் ஒத்திசைவாக - அமைந்திருப்பது இந்திய மாதிரியிலான தீர்வுத் திட்டம்தான் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

இந்திய முறையிலான தீர்வு யோசனையை உள்நோக்கமாகக் கொண்டுதான் தென்னிலங்கை காய்களை நகர்த்துமானால் - அரசியல் நகர்வுகளைச் செய்ய எத்தனிக்குமானால் - அது தமிழர் தரப்பை எந்த வகையிலும் திருப்தி செய்யவே மாட்டாது என்பது தான் யதார்த்தம்.

இந்திய மாதிரி அரசியல் முறைமை, சமஷ்டிக்கு முன்னரான அதிகாரப் பகிர்வுத் திட்டமே அல்ல என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அரசமைப்புச் சீர்திருத்தங்களுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அங்கத்தவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

*"இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு, சமஷ்டி ஆட்சி முறைக்கு முந்திய நிலைமை கூட அல்ல.*

*"இந்தியாவிலிருந்து பாகிஸ்தானும், தற்போதைய பங்களாதேஷும் பிரிந்து சென்ற சூழ்நிலையில் - அந்தக் காலகட்டத்தில் - உருப்பெற்றது இந்தியாவின் இந்த ஆட்சி முறைமைக்கு வழி செய்த அரசமைப்பு. பிரிவினைக் காலத்தில் - அந்த அனுபவத்தோடு - எழுந்ததால் தனித்துவம் கோரும் தகுதியுடைய தரப்புகளை கட்டுப்படுத்தும் விதத்தில் இறுக்கமான விதிமுறைகள் அதில் புகுத்தப்பட்டுள்ளன.*

*"மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்று கூறப்பட்டாலும், நினைத்த சமயத்தில் மாநில அரசுகளையும், நிறைவேற்று அதிகாரத்தையும் கலைக்கும் அதீத அதிகாரம் மத்திய ஆட்சியில் ஜனாதி பதிக்கு அங்கு உண்டு.*

*"ஆகவே, தனிநாடு கோரி உரிமைப் போர் நடத்தும் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் மாற்றுத் திட்டத்துக்கான அடிப்படை எண்ணக்கரு இந்திய மாதிரியில் இல்லவே இல்லை.*

*"தாங்கள் தனித்துவமான இனம், தங்களுக்கென வசதியான தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன உண்டு எனக் கோரி அதை நிலைநிறுத்துவதற்காகப் போராடி வரும் தமிழர்களின் எதிர்பார்ப்பை 'இந்திய மாதிரி' எந்த வகையிலும் நிறைவு செய்யாது."* - இவ்வாறு தெளிவுபடுத்தியிருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இந்த இந்திய முறைமையை முன்மாதிரியாகக் கொண்டு தீர்வு யோசனையை சிபார்சு செய்து, அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணலாம் எனக் கனவு காணும் அனைத்துக் கட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழு, இந்திய முறைமை பற்றி நேரில் ஆராய்வதற்காக அங்கு சுற்றுப் பயணம் ஒன்றையும் மேற்கொண்டிருக்கின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தியாவில் கிராம மட்ட நிர்வாகத்துக்கு வழி செய்துள்ள அதிகாரப் பரவலாக்கல் முறை, இலங்கை இனப்பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வாக அமையும் என்ற சாரப்பட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அடித்துக் கூறி வருவதுதான்!

இந்திய ஆட்சி முறையைப் பொறுத்தவரை மூன்றாவது மட்ட அதிகாரப் பகிர்வு அலகுதான் கிராம ரீதியான பஞ்சாயத்து நிர்வாக முறை. மத்திய அரசு, அதன் கீழ் மாநில அரசுகள், அவற்றின் கீழ் உள்ளூராட்சி அமைப்புகள், பின்னர் அவற்றையும் தாண்டி கிராமப் பஞ்சாயத்துகள் என்பதே அங்குள்ள நிர்வாக முறைமை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு பிராந்திய சபைகள், மாவட்ட சபைகள், மாகாண சபைகள் என்ற நிர்வாக அலகு ரீதியான அதிகாரப் பகிர்வு முறைமைகள் தீர்வு தராமல் தோற்றுப் போன நிலையில்-

கழுதை தேய்ந்து கட்டெறும்பானமை போல - உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது மாதிரி - பிராந்திய, மாகாண, மாவட்ட சபை முறைமைகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத் திட்டங்கள் தேய்ந்து - இப்போது கிராம சபைகள் மட்டத்துக்கு நிலைமை வந்து விட்டது!

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தென்னிலங்கை ஆட்சியாளர்கள் முன்வைக்கும் திட்டங்கள் இத்தகைய குறுகிய சித்தாந்தங்களுக்குள் சிக்குண்டிருக்கும் வரை - பரந்த, விசாலமான எண்ணக்கரு அவர்களுக்கு எட்டாத வரை - நிலையான தீர்வுக்கான சாத்தியமான திட்டம் ஒன்றை அவர்களால் தரமுடியாது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்!

# ஜீ.சி.ஈ. (சாதாரண) தர மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான வழிகாட்டல் கருத்தரங்கு

## தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.1

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ. (சாதாரண) தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி கணித, விஞ்ஞான பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டிக் கருத் தரங்குகளை தமிழ் மாணவர் ஒன்றியத் தின் யாழ். மாவட்டப் பிரிவு நடத்தவுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், தீவகம், வலிகாமம் ஆகிய ஐந்து வலயங்களிலும் இக்கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

கருத்தரங்கிற்கான வினாத்தாள்கள் குடாநாட்டில் இருந்து வெளியாகும் நாளேடுகளில் பகுதிபகுதியாக வெளி வரும். மாணவர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் வலயங்களிலுள்ள கருத்தரங்கு மண்டபங்களுக்கு சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்கு பயனுள்ள விதத்தில் மாணவர்களைச் சென்றடைவதற்கு ஏற்ற விதத்தில் பாடசாலை அதிபர்கள் மாணவர்களுக்கு மேற்படி அறிவுறுத்தல்களை தெளிவாக வழங்குமாறும்- கருத்தரங்கு தினத்தில் கருத்தரங்கு நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் தரம் 11 இற்கான வகுப்புகளை நிறுத்தி மாணவர்கள் அனைவரும் பயன் பெற வழி செய்யுமாறும் - தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

கருத்தரங்குகள் இடம்பெறவுள்ள திகதிகள் மற்றும் இடங்களின் விவரம் வருமாறு:

**யாழ். வலயம்**

* வேம்படி மகளிர் கல்லூரி - 4, 5 ஆம் திகதிகள் - காலை 9 மணிமுதல். 4 ஆம் திகதி - விஞ்ஞானம், 5 ஆம் திகதி - கணிதம்.

**வடமராட்சி வலயம்**

* நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் - 11, 12 ஆம் திகதிகள்- காலை 9 மணிமுதல். 11 ஆம் திகதி -கணிதம், 12 ஆம் திகதி விஞ்ஞானம்.

**தென்மராட்சி வலயம்**

* சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 11,12 ஆம் திகதிகள் - காலை 9 மணி. 11 ஆம் திகதி - விஞ்ஞானம், 12 ஆம் திகதி - கணிதம்.

**வலிகாமம் வலயம்**

* மானிப்பாய் இந்துக் கல்லூரி - 18,19 ஆம் திகதிகள் - காலை 9 மணி. 18 ஆம் திகதி - கணிதம், 19 ஆம் திகதி - விஞ்ஞானம்.

**தீவக வலயம்**

* புங்குடுதீவு மகாவித்தியாலயம் - 18,19 ஆம் திகதிகள் - காலை 9 மணி, 18 ஆம் திகதி - விஞ்ஞானம், 19 ஆம் திகதி - கணிதம். (1)

# புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்,நவ.1

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் விசேட பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

எதிர்வரும் சனிக்கிழமை ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் விசேட பரீட்சை யாழ். மாவட்டத்திலும் நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான வினாத்தாள்கள் வந்து சேர்ந்துள்ளன என யாழ். வலயக் கல்வி வட்டாரம் ஊர்ஜிதம் செய்தது.

இதேவேளை - வரணி மகா வித்தியாலயத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை நிலையம் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்திற்கும் -

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம் அ.த.க. பாடசலை, உசன் இராமநாதன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள்-

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1-117-202)

# சட்டவிரோத மண் அகழ்வை தடுத்து நிறுத்த அரச அதிபர் முயற்சி

## உதயன் செய்தியைச் சுட்டிக்காட்டி பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,நவ.1

வடமராட்சியில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அண்மித்த பகுதியான ஆனைவிழுந்தானிலும் மற்றும் தென்மராட்சியில் வரணி பகுதியிலும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருவது குறித்து உதயனில் வெளிவந்த செய்திகளையடுத்து இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து சட்டவிரோத மண் அகழ்வை தடுத்து நிறுத்துமாறு யாழ்.அரசாங்க அதிபர் பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

சட்டவிரோத மண் அகழ்வினால் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பற்றி உதயனில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயங்களை அரசாங்க அதிபர் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

பருத்தித்துறையில் சட்ட விரோத மண் அகழ்வு ஊரடங்கு வேளையில் இடம்பெறுவதாக பத்திரிகை செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் தென்மராட்சியில் வரணிப் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்பவர்கள் வயல் நிலங்கள் ஊடாக வாகனங்களைச் செலுத்தி பயிர்களுக்கு பெரும் சேதம் விளைவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வரணி ஆனைவிழுந்தான் பகுதியில் தாழ்வான பகுதிகளில் மண் அகழப்படுவதால் அப்பகுதியில் நீண்டகால சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக தெரிவித்துள்ள அரசாங்க அதிபர், கடல் நீர் நன்னீருடன் கலந்து விடாமல் தடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடை திட்டுகளிலிருந்து மணல் அகழப்படுவது நன்னீரை பாழ்படுத்தி விடக்கூடிய நிலைமை உருவாகலாம் என்றும் இது எதிர்கால சந்ததியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்றும் அரச அதிபர் கவலை தெரிவித்துள்ளார். (ப)

தென்மராட்சிப் பிரதேசத்தில்

# சட்டவிரோத மணல் அகழ்வு; இரண்டரை லட்சம் ரூபா அபராதம்!

தென்மராட்சி,நவ.1

சட்ட விரோதமாக மணல் அகழ்ந்த இருவர், பார ஊர்தியின் சாரதி ஆகியோருக்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றில் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

சட்ட விரோதமாக மணல் ஏற்றிய இருவருக்கு தலா 75 ஆயிரம் ரூபா அபராதமும், அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 15 மாத் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் -

உரிய ஆவணங்களின்றி மணல் ஏற்றிய பார ஊர்த்தியின் சாரதிக்கு ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 20 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் - நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் மணல் ஏற்றிய பார ஊர்தியை 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், நீதிமன்றினால் ஏற்கக்கூடிய தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான்-

பார ஊர்தியை தினமும் காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையிலும் பி.ப 3 மணிக்கும் 4 மணிக்குமிடையிலும் நீதிமன்றில் காண்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

# அரசியல் தீர்வு காண்பதன் மூலம் யுத்தத்துக்கு நிரந்தர முடிவு காணலாம்

## ஈ.பி.டி.பி அறிக்கை

கொழும்பு, நவ.01

பேச்சு மேடையில் அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைக்கவேண்டும். அதன் மூலம் யுத்தம் நிரந்தரமாக இல்லாதொழியும்- என்று ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது.

ஈ.பி.டி.பி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை சமாதானத்தை நோக்கி நகர வேண்டும் என்பதே இலங்கைத் தீவின் அனைத்து மக்களினதும் விருப்பங்களாகும்.

சர்வதேச சமூகத்தின் விருப்பமும் இதுவே. அரசாங்கத்தின் விருப்பமும் இதுவே. புலிகள் மீதான நம்பகத்தன்மைகள் எமக்கு இல்லாதிருப்பினும் ஈ.பி.டி.பி யின் விருப்பமும் இதுவே.

ஆனாலும் கடந்த காலங்களைப் போல் இன்றைய ஜெனீவாப் பேச்சு வார்த்தையினையும் முடிவுகள் எதையும் எட்டிவிடாமல் இடையில் முறித்து விட புலிகள் முடிவெடுத்து செயற்பட்டிருக்கின்றார்கள். இதற்கு புலிகள் கூறும் காரணம், புலிகள் தாமாகவே மூட வைப்பதற்கு காரணமாக இருந்த ஏ-9 பாதையை திறக்க வேண்டும் என்ற கோரிக்கை மட்டும்தான். இது சமாதானத்தின் மீது புலிகளுக்கு விருப்பங்கள் இல்லை என்பதையும் தமிழ் பேசும் மக்களின் நலன்களில் புலிகள் ஒருபோதும் சார்ந்திருப்பதில்லை என்பதையும் குறித்து நிற்கின்றது.

இந்த நிலையில் ஜெனீவா பேச்சு வார்த்தையில் ஏ-9 பாதையை திறந்து விடாவிட்டால் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியாது என நிபந்தனை விதித்திருக்கின்றனர் புலிகள். இது எமது மக்களின் வாழ்வின் மீது மேலும் துயரங்களை சுமத்தவே வழி வகுத்திருக்கின்றது. ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டுமாயின் அப்பாதையில் அனைவரும் சுதந்திரமாக பயணம் செய்ய புலிகள் அனுமதிக்க வேண்டும் என்றும் மக்களிடம் கட்டாய வரி என்ற பெயரில் கப்பம் பறிக்கக்கூடாது எனவும், புலிகள் மக்கள் மீதான வன்முறைகளையும் அச்சுறுத்தல்களையும் மற்றும் தாக்குதல்களையும் உடன் நிறுத்த வேண்டும் என்றும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தெரிவித்திருக்கின்றது.

எமது மக்களின் நலன் சார்ந்தது என்பதை சாதாரண குடிமக்கள் தொடக்கம் சர்வதேச சமூகம் வரைக்கும் உணர்ந்து செயலாற்ற வேண்டும் என ஈ.பி.டி.பியினராகிய நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இது ஒரு புறமிருக்க, போக்குவரத்தும், அத்தியாவசியப் பொருள்களுக்கான விநியோகமும் மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்தப் பிரச்சினைகள் மட்டுமே. அரசியலுரிமைப் பிரச்சினையால் மட்டும்தான் யுத்தம் தொடங்கியது. யுத்தத்தினால் மட்டும்தான் மக்களுக்கு நாளாந்த பிரச்சினைகள் ஏற்பட்டது.

ஆகவே பேச்சு வார்த்தை மேசையில் புலிகள் முன்வைக்கவேண்டிய கோரிக்கை என்பது அரசியல் தீர்விற்கான கோரிக்கையாகவே இருக்க வேண்டும். அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட்டால் யுத்தம் நிரந்தரமாக இல்லாதொழிந்து விடும். யுத்தம் இல்லையென்றால் இது போன்ற மக்களின் நாளாந்தப் பிரச்சினையும் இயல்பாகவே தீர்ந்துவிடும். அரசியல் தீர்விற்கு வழி தேடாமல் நாளாந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது போல் தங்களது சுயலாபங்களுக்கான நிபந்தனைகளை முன்வைப்பதென்பது வேருடன் மரம் இருக்க இலைகளை மட்டும் பிடுங்கும் போலித்தனமான நடவடிக்கையாகும் - என்று உள்ளது.

## நாளை

ஐப்பசி 16
வியாழக்கிழமை
02.11.2006
திதி : துவாதசி
பின்னிரவு : 01.49
நட்சத்திரம் : பூரட்டாதி
பிற்பகல் : 02.34
சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம் : 01.34 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தரம் 5 புலமைப் பரீட்சை - 2006

## வினாத்தாள் - I

ஆசிரியர்-திரு.P.அம்பிகைபாகன்-கொழும்பு


* வினா 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01. இக்கோலத்தில் (?) என இடப்பட்ட இடத்தில் வரக்கூடிய பொருத்தமான உரு எது?




(01) (02) (03)

02.




(?) என்ற இடத்தில் வரக்கூடிய எண் யாது?
(1) 50 (2) 20 (3) 40

✱ 3,4,5, ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.
* (A,B,C,D) ஆகியோர் துடுப்பாட்டத்தில் விருப்பமுடையோர்
* (E,F,G,H) ஆகியோர் கால்பந்தாட்டத்தில் விருப்பமுடையோர்.
* (B,C,F,G,) ஆகியோர் 12 வயதிற்குட்பட்டவர்கள்
* (D,B,G) ஆகியோர் ஆண்கள்

03. பின்வருவனவற்றில் எவர் 12 வயதிற்குட்பட்ட துடுப்பாட்டத்தில் விருப்பமுடைய ஆண் ஆவார்
(01) A (02) B (03) D

04. 12 வயதிற்குட்பட்ட எந்த இரு பெண்கள் முறையே துடுப்பாட்டத்திலும் கால்பந்தாட்டத்திலும் விருப்பமுடையவர்கள் ஆவார்.
(01) A,B (02) C,F (03) C,E

05) பின்வருவோரில் எவர் கால் பந்தாட்டத்தில் விரப்பமுடைய 12 வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளை ஆவார்.
1) B 2) G 3) C

✱ 6,7,8 ஆகிய வினாக்களுக்கு தரப்பட்டள்ள பந்தியில் உள்ள இலக்கங்களுக்கு பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.


அகல்யா தனது அண்ணனுடன் வீடு சென்றபோது எதிரே வந்த வான் அவளுடன் மோதுண்டதால் பலத்த காயத்திற்கு உள்ளாகி (1) அனுமதிக்கப்பட்டாள். இதனை அறிந்த அவளது தாய் (2) மகளைப் பார்க்க ஓடோடிச் சென்றாள். இதனைக் கேள்விப்பட்ட அவளது தகப்பனார் (3) பணம் எடுத்துக் கொண்டு அகல்யாவிடம் வந்தார்.

06) (1) என்ற இடத்தில் வரக்கூடிய பொருத்தமான சொல் எது?
1) பாடசாலையில் 2) வீட்டில் 3) வைத்தியசாலையில்

07. (2) என்ற இடத்தில் வரக்கூடிய பொருத்தமான சொல் எது?
1) பதைபதைத்தது 2) அவறிற்கு பிடித்த உணவுடன்
3) மகிழ்வுடன்

08. (3) என்ற இடத்தில் வரக்கூடிய பொருத்தமான சொல் எது?
(1) தபாலகத்திலிருந்து (2)சந்தையிலிருந்து (3) வங்கியிலிருந்து

09. இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
(1) 4 (2) 5 (3) 6



* பின்வரும் பாடலை வாசித்து 10ம், 11ம் வினாக்களுக்கு விடையினை தெரிவு செய்க.

நாட்டினிலே நடப்ப தொல்லாம்
நல்ல பல செய்தியெல்லாம்
வீட்டினிலே காட்டிவிடும்
விந்தையான பெட்டியிது!

10. பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள விந்தையான பெட்டி எது?
(1) வானொலி (2) தொலைக்காட்சி (3)தொலைபேசி

11) விந்தை என்பதன் ஒத்த சொல் எது?
(1) சாதாரணம் (2) அதிசயம் (3) வித்தை

12) பின்வருவனவற்றுள் கூடு கட்டத்தெரியாத பறவை எது?
(01) காகம் (02) மைனா (3) குயில்


13. தனது உடலில் பைபோன்ற அமைப்பைக்கொண்ட விலங்கு எது?
(01) கங்காரு (02) கவரிமான் (03) காண்டாமிருகம்

14. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதன் கருத்து எது?
(01) காற்று அடித்தால்தான் மழை வரும்
(02) உரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்து
(03) காற்று அடிக்கும்போது துணிகளை உலர்த்து

15. "சுத்தம் சுகம் தரும்" என்பதற்கு பொருத்தமான இணையான பழமொழி
(01) தன்கையே தனக்கு உதவி
(02) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
(03) கந்தையானாலும் கசக்கிக்கட்டு

16. நான்காக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டு (A) யில் இருந்து பெறப்படும் உரு எது?


(A) (01) (02) (03)




17. கண்ணாடியில் பார்க்கும்போது உரு மாறித் தெரியாத எழுத்து எது?

(01) **B** (02) **Z** (03) **H**

18. சரியான படத்தின் கீக் கோடிடுக.




19. இவ் உருவைக்கொண்டு தயாரிக்கக் கூடிய வடிவம் எது?



(01) (02) (03)

20. பின்வருவனவற்றுள் பிழையான கூற்று எது?
(1)தீக்கோழி ஒரு பறவை ஆனால் அது பறக்கும்
(2) காகம் ஒரு பறவை. அது ஒரு அனைத்தும் உண்ணி
(3) பூனை வீட்டில் வளர்க்கும் பிராணி. அது நான்கு கால்களை உடையது.

I) இரண்டு பேனா ஒரு இறேசரின் விலை ரூபா. 20.00
II) மூன்று பென்சில் மூன்று இறேசரின் விலை ரூபா. 18.00
III) இரண்டு பேனா இரண்டு பென்சிலின் விலை ரூபா. 26.00

21. ஒரு பேனாவின் விலை யாது?
(01) ரூ.5.00 (02) ரூ.7.00 (03) ரூ.9.00

22. இரண்டு பென்சிலின் விலை யாது?
(01) ரூ. 8.00 (02) ரூ.9.00 (03) ரூ.10.00

23. மூன்று இறேசரின் விலை யாது?
(01) ரூ. 3.00 (02) 6.00 (03) ரூ.9.00


24. மூன்று மனிதர்கள் ஒரு வேலையைச் செய்ய 4நாட்கள் எடுக்கும் எனின் ஆறு மனிதர்கள் அவ்வேலையைச் செய்ய எத்தனை நாட்கள் எடுக்கும்?
(01) 8நாட்கள் (02) 6நாட்கள் (03) 2நாட்கள்

* பின்வரும் தரவினை அடிப்படையாகக்கொண்டு 25ஆம், 26ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக. ஒரு பண்ணை ஒன்றில் கோழிகளும் ஆடுகளும் மட்டும் உண்டு. ஆடுகளைவிட இரண்டு மடங்கு கோழிகள் உண்டு. அப்பண்ணையில் உள்ள ஆடுகளின் எண்ணிக்கை 80 ஆகும்

25. அப்பண்ணையில் உள்ள கோழிகளின் எண்ணிக்கையைத் தருக?

26. அப்பண்ணையில் உள்ள ஆடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
(01) 10 (02) 20 (03) 30

* வகுப்பறை ஒன்றில் உள்ள மாணவர்களிற்கு விருப்பமான நிறங்கள் பற்றி பெறப்பட்ட தரவினை கீழேயுள்ள வரைபு காட்டுகின்றது. அதனை அடிப்படையாகக்கொண்டு 27ஆம், 28ஆம், 29ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




27. சிவப்பு நிறம் விரும்பியோர் எத்தனை பேர்?
(01) 20 பேர் (02) 40 பேர் (03) 30 பேர்

28. வெள்ளை நிறம் விரும்பியோர் எத்தனை பேர்?
(01) 10பேர் (02) 20 பேர் (03) 30பேர்

29. ஊதா நிறம் விரும்பியோர் எத்தனை பேர்?
(01) 10 பேர் (02) 5 பேர் (03) 15 பேர்

30. (A,B,C) என்பன முழு எண்களாகும்.
A + B + C யின் பெறுமதி யாது?

```
  A B C
+ A B C
-------
 15 0 2
```

31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31. ஒரு வீட்டுத்தோட்டத்தில் ஒன்று விட்டு ஒன்றாக மிளகாய்ச் செடியும் தக்காளிச்செடியும் நடப்பட்டுள்ளன. முதலில் மிளகாய்ச் செடி நடப்பட்டதெனின் அவ்வீட்டுத்தோட்டத்தில் 33 செடிகள் இருந்தால் தக்காளிச் செடிகள் எத்தனை உண்டு? (...............)

32. கலாவின் வயது 10. மாலாவின் வயது கலாவின் வயதைவிட இரண்டு மடங்குடன் 2 கூடுதலாகும். பாலாவின் வயது (05ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலாவின் வயதின் அரைவாசி எனின் மூவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை எவ்வளவு?

(....................)

33. ஒரு தேநீர் விருந்துபசாரத்தின் போது அரைக்கிலோ கிராம் சீனியில் 100 தேநீர் தயாரிக்கப்பட்டதெனின் ஒரு தேநீருக்கு செலவான சீனியின் அளவு எத்தனை கிராம்? (........................)


34. சுவர் ஒன்றில் 1/4 பங்கு பச்சை நிறமும் 2/8 பங்கு சிவப்பு நிறமும் மீதிக்கு மஞ்சள் நிறமும் பூசப்பட்டது எனின் மஞ்சள் நிறமும் பூசப்பட்டது எனின் மஞ்சள் நிறம் பூசப்பட்ட பகுதி சுவரின் என்ன பங்காகும்?

(.....................)

35. ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்களில் 4.5 கிலோ மீற்றர் நடக்கக்கூடிய ஒருவர் அரைக் கிலோமீற்றர் நடக்க எடுக்கும் நேரம் எவ்வளவு? (........................)

36. கீழ்த்தரப்பட்ட உருவில் கணிதச் செய்கையின் படி பெறுமானம் குறைந்த ஆங்கில இலக்கம் எது?
(01) A + A = B
(02) C + C = A
(03) D + D = C (.......................)

* சிந்மய பாரதி வித்தியாலயத்தில் தரம் ஐந்து விளையாட்டு தொடர்பான விருப்புக்கள் பற்றிய விவரம் முழு மாணவரிடம் இருந்தும் பெறப்பட்டது.




* இதனை அடிப்படையாகக்கொண்டு 36ஆம், 37ஆம், 38ஆம், 39ஆம் வினாக்களுக்கு விடை தருக.

37. துடுப்பாட்டம் மட்டும் விரும்பியோர் எத்தனைபேர்?
(..........................)

38. வலைப்பந்து, உதைப்பந்தும் மட்டும் விரும்பினோர் யார்?
(..........................)

39. மூன்று விளையாட்டும் விருப்பமானோர் எத்தனை பேர்?(..........................)

40. 9 லீற்றர் கொள்ளவுடைய வாளி ஒன்றில் இருந்து 50ml கொள்ளவுடைய பாத்திரத்தால் நீர் நிரபப்பட்டதெனின் எத்தனை தடவை நீர் ஊற்றப்பட்டிருக்கும்.? (........................)

## வினாத்தாள் - II 1 மணி 45 நிமிடம்

01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள (01) தொடக்கம் (10) வரையான வினாக்களுக்கு புள்ளிக்கோட்டின் மேல் விடை எழுதுக.

| | |
|---|---|
| பழமையான நகரம்-எங்கள் பாட்டன், பூட்டன் நகரம் இளமையான நகரம்-வீரம் எழுந்து நிற்கும் நகரம். | தேனீ போல உழைக்கும்-மக்கள் சேர்ந்து வாழும் நகரம் ஞானி யோக சுவாமி-நல்லூர் நாவலர் போற்றும் நகரம். |
| கோயில் சூழ்ந்த நகரம்-கல்வி கொலுவிருக்கும் நகரம் தாயைப்போல எம்மை-என்றும் தாங்கி நிற்கும் நகரம். | நல்ல தமிழ்க் கேட்கும்-யாழ் நகரம் எங்கும் காதில் வெல்லமென இனிக்கும்-அதை வெல்லும் சுவை உண்டோ? |
| கலை நிறைந்த நகரம்-நன்கு கற்றோர் வாழும் நகரம் தலை நிமிர்ந்த நகரம்-உலகத் தமிழர் போற்றும் நகரம் | கவிஞர் - வாகரை வாணன் |

(01) "கொலுவிருத்தல்" என்பதன் பொருள் யாது?
..................................................
(02) 'பழமை' என்பதன் எதிர்ச்சொல் யாது?
..................................................
(03) இப்பாடலில் காணப்படும் உவமைத்தொடர் ஒன்றை எழுதுக?
..................................................
(04) இப்பாடலில் காணப்படும் அடைமொழி ஒன்று எழுதுக?
..................................................
(05) இப்பாடலில் சிறப்பிக்கப்படும் நகரம் எது?
..................................................
(06) இப்பாடலில் காணப்படும் அந்நகரத்தில் வாழ்ந்த பெரியார் ஒருவரின் பெயரை எழுதுக?
..................................................
(07) இப்பாடலில் உள்ள வினைச்சொல் ஒன்றை எழுதுக?
..................................................
(08) இப்பாடலில் உள்ள பெயரெச்சம் ஒன்றை தருக?
..................................................
(09) இப்பாடலில் உள்ள வினையெச்சம் ஒன்றைத்தருக?
..................................................
(10) இப்பாடலைப் பாடிய கவிஞர் யார்?
..................................................

02. பின்வரும் மரபுத்தொடர்களின் கருத்தினைத் தருக.
(01) கைகொடுத்தல்:- ..................................
(02) கண் திறத்தல் :- ..................................

03. பின்வரும் சொற்களின் இளமைப் பெயர்களைத் தருக.
(01) கோழி:- ..................................
(02) ஆடு:- ..................................

04. பின்வரும் சொற்களின் கூலைச்சொற்களைத் தருக.
(01) பாண்:- ..................................
(02) லொறி:- ..................................

05. சொற்களை பொருத்தமாக ஒழுங்கிபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
(01) செய்யும்/மனமே/மருந்து/பொன்/என்ற/போதும்
..................................................
(02) நகரும்/அடியடித்தால்/அம்மியும்/அடிமேல்
..................................................

06. பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தை எழுதுக.
(01) Mother - ..................................
(02) Morning - ..................................
(03) Go - ..................................
(04) Why? - ..................................
(05) School - ..................................

07. பின்வரும் சிங்கள சொற்களின் கருத்தை தருக.
(01) மம :- ..................................
(02) மகே :- ..................................
(03) யன்ன :- ..................................
(04) மல்லி :- ..................................
(05) எ(க்)க :- ..................................

* (08) தொடக்கம் (15) வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

08. இலங்கையின் தேசிய மலர் யாது?
(01) மரமுந்திரிகை (02) நீர் முள்ளி (03) கொன்றை
(04) நீல அல்லி

09. மடிப்புக் குலையாது இருக்க தைக்கப்படும் தையல் எது?
(01) சோம்தையல் (02) பெரிய நூலோடல்
(03) காக்காத்தையல் (04) அடைப்புத்தையல்

10. இலங்கையில் உள்ள மிக நீளமான நதி எது?
(01) களனிகங்கை (02) தெதுறு ஓயா
(03) மாணிக்க கங்கை (04) மாவலி கங்கை

11. பறக்கும் முலையூட்டி
(01) வௌவால் (02) மயில்
(03) ஆந்தை (04) புறா

12. மாலைக்கண் நோய் எவ்விற்றமின் குறைபாட்டால் ஏற்படுகின்றது?
(01) விற்றமின் A (02) விற்றமின் B
(03) விற்றமின் C (04) விற்றமின் D

13. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.
(01) துடுப்பாட்டம் (02) ஹொக்கி
(03) கூடைப்பந்து (04) கிளித்தட்டு

14. போக்குவரத்து ஒளி சமிஞ்சைகளில் காணப்படும் மின்குமிழின் நிறங்கள் முறையே
(01) செம்மஞ்சள், சிவப்பு, பச்சை
(02) செம்மஞ்சள், பச்சை, சிவப்பு
(03) சிவப்பு, செம்மஞ்சள், பச்சை
(04) பச்சை, சிவப்பு, செம்மஞ்சள்

15. நீரினால் பரவும் வித்துக்களில் ஒன்று
(01) ஆடையொட்டி (02) வேங்கை
(03) தாமரை (04) இறப்பர்

● பின்வரும் விளையாட்டுக்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள்இருந்துதெரிந்து படத்தின் கீழ் உள்ள புள்ளிக்கோட்டின் மேல் எழுதுக.
(கால்பந்தாட்டம், ரெனிஸ், கரம், குத்துச்சண்டை, சதுரங்கம், ஹொக்கி)




16. ........................ 17. ........................




18. ........................ 19. ........................

● பின்வரும் பெரியார்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து படத்தின் கீழ் உள்ள புள்ளிக்கோட்டின் மேல் எழுதுக.
(சுவாமி விவேகானந்தர், அன்னை திரேசா, மகாகவி சுப்ரமணிய பாரதியார், சேர் பொன் இராமநாதன், ஆறுமுக நாவலர், காந்தி அடிகள்)





20. ........................ 21. ........................




22. ........................ 23. ........................

24. கீழ் வரும்படத்தினை அவதானித்து வினாக்களுக்கு விடை அளிக்க.




(06ஆம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

(01) இவ் உபகரணத்தின் பெயர் யாது?
(02) கீழ்வரும் எழுத்துக்கள் குறிக்கும் எத்தனம், சுழலிடம், சுமை என்பன எவை என எழுதுக.
A:- ..............................
B:- ..............................
C:- ..............................


25. பின்வரும் வித்துக்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
(முருங்கை, எருக்கலை, புலிநகம், பலா, தோடை, ஆமணக்கு)




(01) ....... (02) ........ (03) ........ (04) ......

• பின்வரும் வினாக்களுக்குரிய விடையினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


26. இவ்வுருவின் பரப்பளவு யாது?




27. இவ்வுருவின் சுற்றளவு யாது?




* கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் தரம்-05 வகுப்பின் 2ஆம் தவணை பரீட்சையில் நந்தன் பெற்ற புள்ளிகளை கீழ்வரும் வரைபு காட்டுகிறது. அதனை அடிப்படையாகக்கொண்டு 25ஆம், 26ஆம் வினாக்களுக்கு விடையினைத் தருக.




28. வரைபினை அடிப்படையாகக்கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| பாடங்கள் | நந்தன் பெற்ற புள்ளிகள் |
|---|---|
| (01) தமிழ் | |
| (02) கணிதம் | |
| (03) சுற்றாடல் | |
| (04) சமயம் | |
| (05) ஆங்கிலம் | |

29. வரைபினை அடிப்படையாகக்கொண்டு நந்தனின் கல்வி நிலை பற்றி ஐந்து அமைப்பான வாக்கியம் எழுதுக.
(01) ..............................
(02) ..............................
(03) ..............................
(04) ..............................
(05) ..............................

30. 192 *l* கொள்ளளவுடைய நீர்த்தாங்கியின் 1/8 பங்கு நீர் பூங்கன்றுகளுக்காக பயன்படுத்தப்பட்டது. பூங்கன்றுகளுக்காக பயன்படுத்திய நீர் எத்தனை லீற்றர்?
(..............................)

31. 105m துணியில் 50m துணி கைக்குட்டைக்காகவும் 25m மேசை விரிப்புக்காகவும் பயன்படுத்தப்பட்டது. எஞ்சியிருக்கும் துணி எத்தனை மீற்றர்?
(..............................)

32. இரண்டு பேனை வாங்கும் பணத்திற்கு நான்கு பென்சில் வாங்கலாம். இரண்டு பென்சில் வாங்கும் பணத்திற்கு ஐந்து இறேசர்கள் வாங்கலாம். ஒரு இறேசர் ருபா.2.00 எனின் ஒரு பேனையின் விலை யாது?
(..............................)

33. 4kg 250g சீனியை 50g பக்கற்றுக்களாக அடைக்கப்பட்டதெனின் எத்தனை 50g பக்கற்றுக்கள் அடைக்கப்பட்டிருக்கும்? (..............................)

34. "நிறை கலசம்" காணப்படும் தாள் நாணயம் எது?
(..............................)

35. "நீர் புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்தால்.." என்னும் தலைப்பில் உங்கள் மனநிலையை வெளிப்படுத்தும் வகையில் ஆறு ஆக்கபூர்வமான வாக்கியங்களை எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களிற்கு குறையாமலும் எழுவாய் பயனிலை தொடர்பு திருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்)
(01) ..............................
(02) ..............................
(03) ..............................
(04) ..............................
(05) ..............................
(06) ..............................


## தவறிவிட்டது

கெருடாவில், சாவகச்சேரியை சேர்ந்த நாகலிங்கம் இந்திரகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல (710510636) யாழ்ப்பாணத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் 26.10.2006 தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
கொடிகாமம் அருள்நாயகி புத்தகசாலை, சாவகச்சேரி சுமங்கலி புடைவையகம். 0212227263, 060 221 3475


## மருத்துவ முகாம்

தென்மராட்சி,நவ.1

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கல்வயல் பிரிவு மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை கடந்த சனிக்கிழமை கல்வயல் சண்முகாநந்தா வித்தியாலயத்தில் நடத்தினர்.

கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், பெண் நோயியல், பொது மருத்துவம் ஆகிய நோய்களுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டன. நூற்றுக்கும் அதிகமான மக்கள் பரிசோதனைகளில் கலந்துகொண்டனர்.

கண்பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட ஒரு தொகுதியினருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. ஏனையோருக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதேபாடசாலையில் வைத்து மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படுமெனவும் புதிதாக கண் பரிசோதனையில் கலந்துகொள்பவர்கள் அன்றைய தினம் பாடசாலைக்கு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

## அரச செலவில் சடலம் அடக்கம்

நெல்லியடி,நவ.1

வல்வெட்டித்துறையில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலின்போது கிளைமோரைக் கொண்டுவந்தவர் எனக் கருதப்படும் நபரது சடலம், அடையாளம் காணப்படாததை அடுத்து, நேற்றுமுன்தினம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இந்த நபரது சடலமே அடக்கம் செய்யப்பட்டது. (1-115

## மொறட்டுவ பல்கலையில் மோதல்

கொழும்பு,நவ.1

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல்களில் 12 மாணவர்கள் காயமடைந்தனர். அவர்கள் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொறியியல்பீடத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தேசிய தொழில்நுட்ப கற்கை நெறி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலையடுத்து பல்கலைக்கழக வளவுக்கு பிரவேசிக்க இரு துறை [illegible] கம் தடைவிதித்துள்ளது. (1)


## A/L Day Class
## Science Centre Nelliady

கணித, உயிரியல் பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
வழமையான ஆசிரியர் குழுவுடன்
திங்கள் முதல் வெள்ளி வரை
நேரம்: 8.00 (a.m)
முக்கிய குறிப்பு:- கலை, வர்த்தகப் பிரிவுகளும் ஆரம்பமாகிவிட்டன.
(54838)


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் அம்பிகாபதி ஜசீலன்

இனியவனே நற்தொண்டு செய்து
சுடராகிப் போனாயே!
எங்களுக்காய் உழைத்த உந்தன்
தந்தையின் நிழல் தேடி
தனியே நீ சென்றனையோ!

அல்வாய் வடமேற்கு.

இளம்பிறை ச.ச. நிலையம்,
இளம்பிறை வி.கழகம்.
(54833)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி மனோராஜி மகேந்திரன்
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி புவனேஸ்வரி இராமநாதன்
(புவனம் ரீச்சர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.
(5484)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
12 - 12 - 1923



மறைவு
03 - 10 - 2006

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

### சின்னராசா துரைசாமி (சோதி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.11.2006) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.
(54833)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை சுதர்சன்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுதர்சன் 29.10.2006 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (30.10.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
(54835)

தகவல்:
க.செல்லத்துரை
(தந்தை)

### பேரின்பநாயகம் சுசீலாதேவி



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரின்பநாயகம் சுசீலாதேவி 30.10.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - சின்னாச்சி தம்பதியரின் மகளும் பேரின்பநாயகத்தின்(பேரம்பலம்) அன்பு மனைவியும் வேலாயுதபிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் (பிரான்ஸ்) சகோதரியும் உஷானந்தினி, விஸ்வநாதன் (பிரபா),புவிகரன் (லண்டன்), தசாசாமினி ஆகியோரின் அன்புத் தாயும் சுதாகரனின் மாமியும் திபீஷனின் பேர்த்தியும் அருந்தவம் - தனலட்சுமி, கந்தசாமி - இரஜேஸ்வரி, செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2006) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.
(54834)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாவின் காலத்தில்தான் விடுதலைபெற தமிழ்மக்கள் அவா!

## ஜெனிவா ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன்

ஜெனிவா,நவ.1

நமது தேசியத் தலைவரது காலத்தில் தான் எமது மக்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து சுதந்திரத்துக்காகவும் உரிமைக்காகவும் போராடும் சக்தியைப் பெற்றுள்ளனர். அவரது காலத்தில்தான் நாம் விடுதலை பெற வேண்டும் என்பது உலகத்தமிழர்கள் அத்தனை பேரினதும் வேண்டுகையாக உள்ளது.

பேச்சுகளின் முடிவில் ஜெனிவாவில் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையில் தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரனுக்கு பின்னரான தலைமை குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

காலம் காலமாக ஸ்ரீலங்கா அரசால் இன அழிப்புக்குள்ளாக்கப்பட்ட எம்மக்களினது உரிமைக்காகவும் சுதந்திரத்துக்காகவுமான போராட்டத்தின் தலைவராக - ஒடுக்கப்பட்ட அடக்கு முறைகளுக்குள்ளான தேசிய இனத்தின் தலைவராக - எம்மக்களை வழிநடத்திச் செல்லக்கூடிய சக்திமிக்க தலைவராக - அனைத்து மக்களாலும் மதிக்கப்படக்கூடிய, கௌரவிக்கப்படக்கூடிய தலைவராக தலைவர் பிரபாகரன்தான் எங்கள் தேசிய இனத்தில் தோன்றிய தலைவர். அழிந்துபோகும் நிலையில் இருந்த மக்கள் அவருடைய காலத்தில்தான் இன்று உலகத்தில் தலைநிமிர்ந்து நிற்கின்றனர். அவரால்தான் எம்மக்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து சுதந்திரத்துக்காகவும் உரிமைக்காகவும் போராடும் சக்தியைப் பெற்றுள்ளனர்.

ஆகவே, அவரது காலத்தில்தரன் நாம் விடுதலை பெறவேண்டும் என்பதுதான் உலகத்தில் வாழ்கின்ற அத்தனை தமிழ் மக்களினதும் வேண்டுகையாக உள்ளது. ஆகவே, அடுத்த தலைமைகளைப் பற்றி எமது தமிழ்த் தேசிய இனம் சிந்திக்கவேண்டிய தேவையோ அவசியமோ இல்லை. ஆபிரிக்க மக்களுக்கு ஒரு நெல்சன் மண்டேலா - அமெரிக்க மக்களுக்கு ஜோர்ஜ் வாசிங்டன் - கியூபா மக்களுக்கு பிடல் காஸ்ட்ரோ - சீன மக்களுக்கு மா-சேதுங், இப்படி பல்வேறு நாடுகளில் ஒழுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மக்களுக்கு ஒரு தேசியத் தலைமை சுதந்திரத்தை வழி நடத்திச் செல்லுகின்ற உறுதிமிக்க தலைமைதான் வழிகாட்டியிருக்கிறது. அதேபோன்றுதான் எங்கள் தேசத்துக்கும் வழிகாட்ட - வழி நடத்த - எங்களது தேசியத் தலைவர் உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் மக்களையும் தேசத்தையும் நேசிக்கின்ற தலைவராக உள்ளதால் எங்களது மக்கள் அசைக்க முடியாத சக்தியாக இருப்பார்கள்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உடல் நலக் குறைவாக இருப்பதால் பயணிக்க வேண்டாம் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். பயணிக்க முடியாத நிலையில் இருப்பதால் அவர் இப்பேச்சுகளில் பங்கேற்கவில்லை.

### இந்தியாவின் விருப்பம்

*கேள்வி:-* இந்தியா தொடர்பிலான நிலைப்பாடு என்ன?

*தமிழ்ச்செல்வன்:-* இந்தியா தொடர்பான எமது நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக எமது தேசியத் தலைவர் அவர்கள் பல வழிகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தியாவில் வாழ்கின்ற பல கோடி தமிழ் மக்களின் அபிலாசைகளையும் இந்தியா புரிந்திருக்கிறது. பிராந்திய நாடு என்ற வகையில் இந்தியாவும் வன்முறைக்கு முடிவு கட்டி சமாதான வழியில் அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தனது விருப்பத்தை பல முறை வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்தியாவின் ஏற்பாட்டில் நடைமுறையிலிருந்த வடக்கு - கிழக்கு இணைப்பை ஸ்ரீலங்கா அரசு இப்போது சட்டவிரோதமாக்கியிருக்கிறது. இதன் மூலம் அரசியல் வழித் தீர்வுக்கான அனைத்து முயற்சிகளையும் முடக்கிவிட்டுத்தான் ஸ்ரீலங்கா அரசு பேச்சு மேசைக்கு வந்தது. அரசியல் தீர்வு பற்றிப் பேசுவோம் என்று சொல்லுகிறார்களே தவிர அவர்களிடம் அரசியல் தீர்வு எதுவுமே இல்லை என்பதைத்தான் அறிய முற்பட்டும் அறிய முடியாமல் போன விடயம்.

*கேள்வி:-* ஐரோப்பியத் தடை பற்றி?

*தமிழ்ச்செல்வன்:-* எம் மக்கள் மீதான தடைதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை. அது ஸ்ரீலங்கா அரசின் பொய்ப் பரப்புரைகளால் ஏற்படுத்தப்பட்ட தடை.

*கேள்வி:-* ஐக்கிய இலங்கை கட்டமைப்புக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்ற எரிக் சொல்ஹெய்மின் கருத்து குறித்து?

*தமிழ்ச்செல்வன்:-* எரிக் சொல்ஹெய்ம் அவர்களும் சர்வதேச சமூகமும் அண்மைக் காலமாக சமரச வழியில் தீர்வை எட்ட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றனர். ஆனால், ஸ்ரீலங்கா அரசோ சாதாரணமான, மனிதாபிமான பிரச்சினைகளுக்கே தீர்வைக்காண முடியாத அரசாக உள்ளது. அப்படியான அரசு எப்படி எமது தமிழ் மக்களின் அபிலாசைகளையும், அரசியல் கோரிக்கைகளையும், உரிமைகளையும் மதித்து தீர்வை முன்வைக்கப் போகிறது என்பது கேள்விக்குறியான விடயம்.

அண்மையில் வடக்கு - கிழக்கைப் பிரித்து தமிழர் தாயகத்தை - தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து அவர்களுடைய மனங்களை நோகடித்து அரசியல் தீர்வுக்கான வழிகளையே சீர்குலைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் எவ்வளவு தூரம் பார்த்துக்கொண்டு இருக்கப்போகின்றது? உதாசீனப்போக்கு - சர்வதேசத்தை மதிக்காத இந்தப் போக்கு - தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை - தமிழர்களின் அபிலாசைகளைப் புறந்தள்ளி தமிழ் மக்களின் மீது இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிடுகிற இந்தப் போக்கை தமிழ் மக்கள் இனி ஒருபோதும் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். தமிழ் மக்கள் தங்களது தலைவிதியைத் தாங்களே நிர்ணயம் செய்யும் நிலையை நோக்கித் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

### அரசியல் தீர்வைத் தரும் கூட்டாக அமையும் என்று நம்பவில்லை

*கேள்வி:-* ஸ்ரீலங்கா சுந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இடையேயான ஒப்பந்தம் தொடர்பில்?

*தமிழ்ச்செல்வன்:-* ஸ்ரீலங்காவின் ஆளும் சுதந்திரக் கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையேயான ஒப்பந்தமானது ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டா? தங்களுடைய சுயநலம் நோக்கம் கொண்ட கூட்டா? உண்மையாகவே தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகளை விட்டுக் கொடுப்பதற்கும் வழங்குவதற்குமான கூட்டா? என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்த்திருக்க வேண்டும்.

ஆனால், இந்தக் கூட்டை உருவாக்கியுள்ள அதே நேரத்தில் ஸ்ரீலங்கா அரசானது ஒரு மனிதப் பேரவலத்தை எமது மண்ணில் உருவாக்கி - நிலைமைகளை மோசமாக்கி - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் சீர்குலைத்து - மனிதாபிமான நெருக்கடிகளை ஏற்படுத்தி - களநிலையில் மிக மோசமான சூழ்நிலையை உருவாக்க முயன்றனர். எந்த ஒரு சூழ்நிலையிலும் இது ஓர் அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான கூட்டாக இருக்கும் என்று நான் நம்பவில்லை. அத்தகைய நோக்கம் இருந்தால் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைக்கு அரசு இந்தக் கட்டத்தில் சிறிய தீர்வைத் தந்து நம்பிக்கையை வலுப்படுத்தியிருக்கும். ஆனால், ஸ்ரீலங்கா அரசு அதனைக் கூட விருப்பவில்லை என்கிறபோது அவர்களின் கூட்டில் எங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அது ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டாக இருக்கலாம் என்றுதான் நாங்கள் நம்புகின்றோம்.

(இ-3)

## இறுதித் தீர்வுக்கான ஒரு வழிமுறை ஜெனிவாப் பேச்சில் கிடைத்துள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கருத்து

கொழும்பு, நவ.1

இணக்கம் எதனையும் எட்டாமலேயே முடிவடைந்த போதிலும் இறுதித் தீர்வுக்கான ஒரு வழி ஜெனிவாப் பேச்சுகள் மூலம் ஏற்பட்டிருக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இந்திய சிவில் சமூக, சங்க பிரதிநிதிகள் குழுவினரைச் சந்தித்தபோதே அவர் இக் கருத்தைத் தெரிவித்தார். இந்திய பத்திரிகையாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சமாதானச் செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள் ஆகியோரே இச் சிவில் சமூக அமைப்பில் இடம்பெற்றனர்.

தெற்கே, பிரதான அரசியல் கட்சிகள் இரண்டிற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்று முன் வைக்கப்படும் சந்தர்ப்பத்தில், அதனடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு சந்தர்ப்பம் கிட்டும் என விடுதலைப் புலிகள் விசேடமாக குறிப்பிட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார். இதனூடாக கடைசித் தீர்வு பற்றிய ஒரு வழி பிறந்துள்ளதாகவும், அது இம்முறை ஜெனிவாப் பேச்சின்போது பெறப்பட்ட ஒரு சக்தியாகும் என்று ரணில் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் இந்திய சிவில் சமூக சங்கத்தைச் சார்ந்த குல்திப் நாயர், அஸீஸ் பஸா, காயத்திரி சிங், கே.அகா, ஜடின் தேசாய், வர்சா ராஜன் பெரி ஆகியோரும் கலாநிதி நிமல்கா பெர்னாண்டோவும் பங்கு பற்றினர் என்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,நவ.1

வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தால் யாழ்.பிரதேச செயலகத்தினூடாக 6 மாத கால மரவேலைப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இதில் இணைந்துகொள்ள விரும்புவோர் தமது சுய விவரம் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் 'பிரதேச செயலர், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-203)

## வாரத்தில் இரு தினங்கள் 'குமுதினி' படகுச் சேவை

நல்லூர், நவ.1

அரச பயணிகள் படகான 'குமுதினி' நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே வாரத்தில் இருநாள்கள் சேவையில் ஈடுபடவுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எம்.எஸ்.சிவனேசராஜா தெரிவித்தார்.

வாரம் தோறும் பிரதி திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலையிலும் மாலையிலும் இச்சேவைகள் நடைபெறும். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் இச் சேவை ஆரம்பமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். எரிபொருள் போதியளவு கையிருப்பில் இல்லாததால் தினசரி 2 சேவைகளை நடத்த முடியவில்லை என்றும் -

ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் வசதி கருதி திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இச்சேவை நடத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202-111-88)


## வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியில் விளையாட்டுத் துறை முதல்வராக அரிய பணியாற்றி உதைபந்தாட்டத்துறையை தேசிய மட்டத்திற்கு பங்குபற்ற வித்திட்ட பெருந்தகை

**உயர் திரு.மு.நடராஜா**

அவர்கள் இருபத்தி ஆறு வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து வலிகாமம் கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமை குறித்து ஸ்கந்தா சமூகம் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஸ்கந்தவரோதய கல்லூரி,
சுன்னாகம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(54811)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


2AB
இ.தர்சினி


3A
க.டர்சினி


2AB
வி.துசாயினி

எமது கல்லூரியிலிருந்து க.பொ.த.(உ/த) 2006 இல் பரீட்சைக்கு கலைப்பிரிவில் தோற்றி மிக் நீண்ட காலத்தின் பின்னர் கல்லூரித் தாய்க்குப் பெருமை சேர்ந்த 3A விசேட சித்திகளைப் பெற்ற செல்வி டர்சினி கந்தசாமி அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இவருடன் சிறப்புப் பெறுபேறுகள் பெற்று சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.

மாணவர்களின் வெற்றிக்கு பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அதிபர் ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வேலணை மத்திய கல்லூரி.

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(54783)



**Congratulation**

*Our warmest greetings and best wishes to* **Mr. & Mrs. Samson** *Managing Director of Micro P.C. System, Jaffna Branch, for a happy and prosperous married life on the occasion of their Marriage on 01.11.2006(Today)*

**C.B Computer Academy**
T.P.: 021 4590291 Station Road, Kondavil.

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி
### மாணவர் அனுமதி தரம் 6-2007

2007ஆம் ஆண்டில் தரம் 6 இல் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி :10.11.2006

- அதிபர்.

(சி/51238)

## ஸ்கந்தவரோதய கல்லூரி
சுன்னாகம்
### புதிய மாணவர் அனுமதி - 2007

தரம் 6 - தரம் 9 மாணவர்களுக்கான அனுமதி - விண்ணப்ப முடிவு திகதி 10.11.2006

தரம் 1 - ஆரம்பப் பிரிவு விண்ணப்ப முடிவு திகதி 15.11.2006

*(கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்)*

- அதிபர்.

(54812)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ கணபதி துணை

# விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விய வருடம் ஐப்பசித் திங்கள் 18ஆம் நாள் (03.11.2006) வெள்ளிக்கிழமை திரயோதசித்திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய பகல் 9.15 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள தனுலக்கின சுபவேளையில்

இணுவில் கந்தசாமி கோவில்
பிரம்மஸ்ரீ இராமநாதக் குருக்கள் தம்பதிகள்
புளியங்கூடல் சோமசுந்தரக் குருக்கள் தம்பதிகளின் பௌத்திரனும்
நாகரட்ணஐயர் ஏகாம்பாள் அவர்களின் கனிஷ்ட புத்திரன்
**சிரஞ்சீவி கலாதரன்** B.A(Hons), J.P.
[ஆசிரியர் - விஜயரட்ணம் இந்துக்கல்லூரி, நீர்கொழும்பு]
அவர்கட்கு

சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி
பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்கள் தம்பதிகள்
கொக்குவில் இராஜரத்தினஐயர் தம்பதிகளின் பௌத்திரியும்
ஜேர்மனி உமாகாந்தன் ரேவதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
**சௌபாக்கியவதி ரேணுகா**
அவர்களை

கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகண வைபவம் செய்ய இறையருளும் குருவருளும் கொண்டு கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற திருவருள் கூடியிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பம், பந்து மித்திரர் சகிதம் வருகைதந்து சுபமுகூர்த்தத்தை சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம் காலை 6மணி முதல் 7மணிவரை மேற்படி மண்டபத்தில் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ
நா.ஹரீந்திரகுருக்கள் தம்பதிகள் யாழ்ப்பாணம்,
நா.குகேந்திரக் குருக்கள் தம்பதிகள் லண்டன்,
நா.கார்த்திகேயசர்மா தம்பதிகள் கொழும்பு,
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். T.P. 2229839.

பிரம்மஸ்ரீ
உமாகாந்தன் தம்பதிகள் (ஜேர்மனி),
Dr.இ.இலட்சுமணஐயர் தம்பதிகள்
(மங்களபதி)
32, 5/4 ரோகினி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு - 6
T.P. 0094-11 2559345, 0094-11 2502645.

(54777) இரு வீட்டார் அழைப்பு

## நிலாவெளியில் கிளைமோர் தாக்குதல்

திருகோணமலை நிலாவெளி 6ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் கிளை மோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் இப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் கடற்படையினரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டிருப்பதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர். எனினும், இத்தாக்குதலின்போது எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். இத்தாக்குதலை அடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர். (ஐ)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 19 - 07 - 1944
விண்ணில் 07 - 11 - 1996

### திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்

(எழுதுநர் - யாழ். மாநகரசபை)
திதி - ஏகாதசி (01.11.2006)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (54825)

48, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர், தாய், பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## கேள்வி அறிவித்தல்

### இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு)

பொது முகாமையாளர், இலங்கை போக்குவரத்துச் சபை [வடக்கு] அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து

01) யாழ். பஸ் நிலையத்தில் நிழற்குடைகள் 2 அமைத்தல்
02) யாழ். பஸ் நிலைய கட்டட விரிவாக்கம்

ஆகிய கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்காக நமது ஈழநாடு, உதயன், தினக்குரல் பத்திரிகைகளில் 05.08.2006ஆம் திகதி கோரப்பட்டிருந்தது. அக்கேள்வி அறிவித்தல் 03.11.2006 வரைகால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. மூடப்பட்ட கேள்விகள் 08.11.2006ஆம் திகதி 14 மணிக்கு திறக்கப்படும்.

(சி/51243)
பொது முகாமையாளர்,
இ.போ.ச. (வடக்கு).

## பரீட்சை வினாத்தாள்

[நாவலர் வெளியீடு]

தரம் 1 முதல் O/L வரை மூன்றாம் தவணைப் பரீட்சைக்கான வினாதாள்கள் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் யாவும் 05.11.2006 (ஞாயிறு)இற்கு முன் நேரடியாக தொடர்புகொள்ளவும். (54717)

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## கடை வாடகைக்கு

பொருள்களுடன் கடை வாடகைக்கு உண்டு. (அழகு சாதனப் பொருள்கள்)
தொடர்பு: சூரிபிறதர்ஸ்,
முடமாவடிச் சந்தி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.021.2229586 (548810)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 30 - 04 - 1934
மறைவு 02 - 10 - 2006

### செல்வி தவமணி முத்தையா

02.10.2006 காலமான எமது சிறியதாயின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (01.11.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 59, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (54809) குடும்பத்தினர்.

## துயர் பகிர்தல்

### வைத்திய கலாநிதி சிதம்பரப்பிள்ளை இராசரெத்தினம்

[இளைப்பாறிய அதிபர்]

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியைகளான திருமதி பு.சின்னையா, திருமதி இ.சற்குணநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர்களுள் ஒருவரான கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பல்துறை விற்பனருமான சி.இராசரெத்தினம் அவர்கள் காலமாகிய செய்தி அறிந்து துயரடைந்தோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவர்தம் குடும்பத்தினர் துயரத்தில் நாமும்பங்குகொள்கிறோம். குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(54784)
பழைய மாணவர் சங்கம்,
வேலணை மத்திய கல்லூரி.

## தவறி விட்டது

ஜோன்சன் சுரேஸ் என்பவரது செலிங்கோ இன்சூரன்ஸ் நிறுவன அடையாள அட்டை 26.10.2006 அன்று நாவலர் றோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள செலிங்கோ இன்சூரன்ஸ் நிறுவனத்தில் ஒப்படைத்து உதவவும். (54803)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

21.10.2006, தீபாவளி தினத்தன்று பேரூந்தில் தவறி விழுந்த ஒரு தொகைப் பணம் பேகடன் உப்புமடச்சந்தி, K.K.S வீதியில் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.
தொடர்பு : ANDRA பிறிண்டேர்ஸ்,
உப்புமடச் சந்தி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (54816)

## தேவை

கல்பேட், ஊர்க் கோழிகள் உடன் தேவை. கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.

தாசன் பாம்,
158/4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (54892)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 03 - 10 - 1925
மறைவு 04 - 10 - 2006

### அமரர் அருணாசலம் சின்னத்தம்பி

(இளைப்பாறிய கிராம சேவையாளர்)

கடந்த 04.10.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் அருணாசலம் சின்னத்தம்பி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01.11.2006) புதன்கிழமையும் 03.11.2006 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மட்டுவிலிலும் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

சிவன் கோவிலடி,
மட்டுவில், சாவகச்சேரி. (54693)

தகவல்: மனைவி, மகன்மார், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 90ஆம் நாள் ஆத்மாஞ்சலி



உயிர்ப்பு 1979 * 03 * 09
அழிப்பு 2006 * 08 * 04

### அம்பிகாபதி ஜசீலன்

(உயர் கள உத்தியோகத்தர்)
Action Contre La Faim
திருகோணமலை.

**"மனிதம் மரணித்ததால் மரணித்தவன்"**

மூதூரில் கடந்த 2006 - 08 - 04ஆம் நாள் மனிதநேய பணியின்போது அகாலமரணமான பூமாஞ்சோலை அல்வாய் வடமேற்கு, யாழ்ப்பாணத்தினை பிறப்பிடமாகவும், இல, 04, இலிங்கநகர், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்ப வழிகாட்டியின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசியில் ஆறுதல் தெரிவித்தோர், இடர் நேரங்களிலும் அயராது அனைத்து வித உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபங்களினைத் தெரிவித்த சகல அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு எமது இல்லத்தில் 2006 - 11 - 01 ஆம் நாள் புதன்கிழமையன்று நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும், மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி: இல. 04, இலிங்கநகர்,
திருகோணமலை.
"பூமாஞ்சோலை"
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

குடும்பத்தினர்
026 - 2223477
071 - 4352914

## பாலன் மில்ஸ்

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய்(எள்) போன்ற (3கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை) எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

"பாலன் மில்ஸ்"
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
கஜலக்சுமி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை.
T.P:0602212624 (54331)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி இராமநாதன்

(புவனம் ரீச்சர்)



கண்டி வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி புவனேஸ்வரி இராமநாதன் நேற்று (31.10.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் திசைவீரசிங்கம் இராமநாதனின் அன்பு மனைவியும் மனோகரி(கனடா), காலஞ்சென்ற திசைவீரசிங்கம், மனோராஜி, மகேந்திரன்(யாழ். புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியானந்தன்(கனடா), S.R.மகேந்திரன்(முன்னாள் அதிபர், யா/மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நடராஜா, காலஞ்சென்ற அன்னலட்சுமி, Dr.S.கோபாலகிருஷ்ணன், காலஞ்சென்ற கோமளேஸ்வரி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரவீன், பைரன்(கனடா), ஆரணி, அபிசங்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் S.நித்தியநாதனின் வளர்ப்புத்தாயும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2006) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் நுணாவில் மேற்கு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (54828)

தகவல்:
S.R.மகேந்திரன் (மருமகன்).

## துயர் பகிர்கின்றோம்



இளைப்பாறிய அதிபரும், மக்களின் கைராசி வைத்தியரும், வேலணைக் கிராமசபை முன்னாள் தலைவரும், எழுத்தாளரும், வேலணை ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவரும், சந்திரா கூட்டுறவுப் பண்டகசாலை ஸ்தாபகருமாகிய

பேரறிஞர் வேலணையூர் வைத்தியக் கலாநிதி
**சிதம்பரப்பிள்ளை இராசரெத்தினம்**

அவர்கள் 27.10.2006 அன்று காலமானதையிட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய வங்களாவடி ஸ்ரீ முருகனின் பாதம் பணிந்து நிற்கின்றோம்.

வேலணை, வங்களாவடி முருகன்
ஆலய பரிபாலன சபையினர், வேலணை
வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேருவில பிரதேச சபையின் தமிழ் உறுப்பினர் ஊர்காவலர்களாலேயே கொல்லப்பட்டார்!

## கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை

கொழும்பு, நவ.1

சேருவில பிரதேச சபை உறுப்பினர் கோபா சுந்தரம் பத்மகலாபன் சேருநுவர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஊர்காவற் படை வீரர்களான கருணாரட்ண மற்றும் வீரசிங்க ஆகியோரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று தேசியக் கூட்டமைப்புக்கு தம்பகமாகத் தெரியவந்துள்ளதென கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சேருவில மக்கள் வங்கிக்கு முன்னால் சேருவில பிரதேச சபை உறுப்பினர் 30ஆம் திகதி காலை 11 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த இடத்திலிருந்து 50 மீற்றருக்கும் குறைவான தூரத்திலேயே சேருவில பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. மறுபுரம் 40 மீற்றருக்கும் குறைந்த தூரத்திலேயே 41ஆம் மைல்கல் சந்தியில் சோதனைச்சாவடி அமைந்துள்ளது. இந்த இடத்தில் பாதுகாப்பு படையினர் பொலிஸார் எந்நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருப்பர். இருந்தும் சந்தேக நபர்கள் கைது செய்யப்படவில்லை.

வன்னி மாவட்ட கூட்டமைப்பு எம்.பி. சிவநாதன் கிஷோரின் வீடு மீது கடந்த 29ஆம் திகதி இரவு 10மணியளவில் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஏழு கைக்குண்டுகள் .எறியப்பட்டுள்ளன. கிஷோரின் மனைவியும் பிள்ளைகளும் இச்சந்தர்ப்பத்தில் வீட்டில் இருந்துள்ளனர். தெய்வாதீனமாக இவர்கள் எதுவித பாதிப்புமின்றி தப்பியுள்ளனர்.

கிஷோரின் இல்லம் வவுனியா விமானப்படை முகாமுக்கு அருகே இருக்கின்றது. இவரது வீட்டுக்கு இரு புறத்திலும் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளன. ஒரு சோதனைச் சாவடி 15 மீற்றருக்கு அப்பாலும் மற்றது 100 மீற்றருக்கு அப்பாலும் அமைந்துள்ளது.

ஜனநாயக முறைப்படி தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மீது திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தப்படுவதாக கூட்டமைப்பு நம்புகின்றது. இதை கூட்டமைப்பு வன்மையாகவும் கண்டிக்கிறது. - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### பிளாஸ்டிக் தொழிற்சாலையில் நேற்றுப் பெரும் தீ அனர்த்தம்

மத்தோட பொல்கஸ்ஒவிட பகுதியிலுள்ள பிளாஸ்டிக் தொழிற்சாலையொன்றில் நேற்று இடம்பெற்ற பாரிய தீ விபத்தில் கோடிக் கணக்கு ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. நேற்றுக்காலை 7.15 மணியளவில் ஏற்பட்ட இந்த தீ விபத்தில் ரெஜிபோம், பொலிதீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் ஆகியனவே எரிந்து நாசமாகியுள்ளன. தீயை அணைக்க 20 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. இராணுவம் மற்றும் விமானப் படையின் உதவியுடன் தீகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஏறாவூரில் மோ.சைக்கிள் திருட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இக்கொள்ளைச் சம்பவம் செவ்வாய்க் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கிராம நீதிமன்ற வீதி, ஏறாவூர் - 5 எனும் முகவரியைச் சேர்ந்த முத்துலிங்கம் புண்ணியமூர்த்தி என்பவரின் மோட்டார் சைக்கிளே களவாடப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 90 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

### காத்தான்குடியில் இளைஞர் சடலம்

மட்டக்களப்பு - காத்தான்குடிப் பிரதேசத்தில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். நேற்றுக் காலை 9.30 மணியளவில் புதுக்குடியிருப்பு ஆயுர்வேத வைத்தியசாலைக்கருகில் இந்த இளைஞனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தின் கைகள், கால்கள் மற்றும் கண்கள் கட்டப்பட்டிருந்தன. தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பொன்னம்பலம் கிருஷ்ணநாதன் (வயது-25) என அடையாளங்காணப்பட்டுள்ளார்.

## யாழ். மக்களின் அவலங்களை விளக்கி ஐ.நா. அமைப்புகளுக்கு மகஜர்கள்

### தமிழ் தேசியக் கூட்டமைப்பு அனுப்பியது

கொழும்பு, நவ.1

அத்தியாவசியப் பொருள்களின்றி யாழ். குடாநாட்டு மக்கள் படும் அவலங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவிலுள்ள சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்துக்கும் அவசர மகஜர்களை அனுப்பிவைத்துள்ளது.

அரசு-புலிகள் பேச்சுகள் ஜெனிவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே இக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன என்று கூட்டமைப்பு எம்.பி. பத்மினி சிதம்பரநாதன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஏ-9 வீதி மூடப்பட்டதன் பின்னர் யாழ். குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. பொருள்களின் விலை கிடுகிடுவென உயர்ந்தது. யாழ். மக்களின் அவலத்தை அரசின் கவனத்துக்குக் கொண்டுவர கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் பல போராட்டங்களை முன்னெடுத்தது. இருந்தும் அரசின் கவனம் திரும்பவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடி யாழ். மக்களின் அவலத்தைப் போக்க மேற் கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. தெரிவித்தார். (ஐ)

போட்டிப் பரீட்சை வழிகாட்டி வகுப்புகள் நடைபெறுகின்றன

★ பொது உளச் சார்பு ★ மொழித்திறன்

வார நாள்களில் பி.ப. 2.15 - 4 மணிவரை

Science Hall கன்னாதிட்டி

அண்மையில் நடைபெற இருக்கும் இவ் விடயங்கள் தொடர்பான பரீட்சைகளுக்கு ஏற்றது.

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்து - 1976 இல் பிறந்த இந்தியாவில் உயர் கல்வி கற்ற 5' 2" உயரமுள்ள 4இல் செவ்வாய் உள்ள பெண்ணிற்கு படித்த வெளிநாட்டு/ கொழும்பு மணமகன் தேவை.

தொடர்புக்கு: ஐ.மகேந்திரலிங்கம்
இராச வீதி, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தர் சின்னப்பிள்ளை



மறவன்புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். றோட், 3 ஆம் கட்டை கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சின்னப்பிள்ளை நேற்று(31.10.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தரின் அன்பு மனைவியும் சி.மகேஸ்வரியின் அன்புத் தாயும் சிவராசாவின் (மெக்கானிக், இராமநாதன் றோட், திருநெல்வேலி), அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் கட்டை,*
*கே.கே.எஸ். றோட்,*
*கொக்குவில்.* (54846)

தகவல்:
**சோ.சிவராசா(மெக்கானிக்)**
**இராமநாதன் வீதி, திருநெல்வேலி**

### செல்லத்துரை நாகம்மா



காரைநகர்,S.M.கேணியடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா கந்தசாமி கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நாகம்மா 30.10.2006 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிளாக்கர் செல்லத்துரையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவஞானம்,செல்வராசா, காலஞ்சென்ற சிவபாக்கியம் , பரஞ்சோதி, தவமணிதேவி, கமலாதேவி, செல்வரத்தினம், கனகாம்பிகை ஆகியோரின் அன்புத்தாயும் ஆறுமுகம், திலகவதி, செல்வரத்தினம், சோமசுந்தரம், இராசையா, மங்களேஸ்வரி, சோமசுந்தரம் ஆகியோரி பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(31.10.2006) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.M.கேணியடி,
*காரைநகர்.* (54850)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி வனிதா இரகுநாதன்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வனிதா இரகுநாதன் 30.10.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் க.இரகுநாதனின் அன்பு மனைவியும் அசோகன், மோகன்,லதா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.11.2006) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாகியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.* (சி-51245)

தகவல்:
**கணவதிப்பிள்ளை இரகுநாதன்**
**(கணவர்).**

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**பாலசுப்பிரமணியம் சிவநேசமலரின்**
அன்புத் தாய்

**கணபதிப்பிள்ளை செல்லம்மா**

அவர்கள் 30.10.2006 இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள்,
**யா/ சித்தின்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.**

### மரண அறிவித்தல்

### செல்லப்பா சிவசுப்பிரமணியம்



காரைநகர், மருதடியைப் பிறப்பிட மாகவும் மன்னார் முருங்கன் 12 ஆம் கட்டையில் வசித்தவரும், தற்போது கனடா, ரொரன்றோவை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லப்பா சிவசுப்பிரமணியம் 28.10.2006 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் பவானி, விஜயபாலன், தயாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாதேவன் (கனடா), தாரிணி, தர்சினி ஆகியோரின் மாமனும் பிரணவன், சரண்யன், சோபிகா, லுவனேஸ், அனோரா ஆகியோரின் அன்புப் பேரனும் அருளம்பலம் (மலேசியா), காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராசரட்ணம், மகேஸ்வரி, நாகரத்தினம்,சாவித்திரி (லண்டன்), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2006) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஜெயரட்ண மலர்ச் சாலையில் நடைபெற்று, தகனக்கிரியைகள் முற்பகல் 11 மணி யளவில் பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இந்துக்கும் பெரியமணல் காரைநகரிலும் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
**திருமதி. வ. தனபாலசுந்தரம்.**

## மரண அறிவித்தல்கள்

### மரியான் வெலிச்சோர் ஆபரணம்

அருட்தந்தை V.A.ஜெறோம் (O.M.I) அவர்களின் அன்புத் தந்தை மரியான் வெலிச்சோர் ஆபரணம் நேற்று(31.10.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் நாளை அறிவிக்கப்படும்.

தகவல்:
**மனைவி.**

### பேரம்பலம் உருக்குமணி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் உருக்குமணி நேற்று (31.10.2006) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்பு மனைவியும் குமாரசாமி (கனடா), காலஞ்சென்ற இராசலட்சுமி, இராசரத்தினம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), பஞ்சலிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2006) புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்துக்கல்லூரி வீதி,*
*வலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (சி-51247)

தகவல்:
**பே.இராசரத்தினம்**
**(மகன்).**

### செல்லையா தியாகராஜா



கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும், ஈஞ்சடி, சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தியாகராஜா (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்) 30.10.2006 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - நல்லம்மா தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராஜா (தொழிலதிபர், அன்னை என்ரபிறைஸ், இந்தியா), ஸ்ரீதரன் (உப அதிபர், யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதமதியின் (ஆசிரியை, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) அன்பு மாமனும் சாஹித்யனின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், சிவசுப்பிரமணியம் மற்றும் அழகேஸ்வரி, மகேந்திரம் (கனடா), யோகேஸ்வரி (கனடா), தங்கேஸ்வரி (தபாலதிபர்), நகுலேஸ்வரி (லண்டன்), தனலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2006) புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஈஞ்சடி,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
**தி.புவனேஸ்வரி (மனைவி).**
**தி.ஸ்ரீதரன் (மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாப் பேச்சுகள் அரசுக்கு பெரு வெற்றி
# ஜனாதிபதியைச் சந்தித்து அரசகுழு பெருமிதம்

கொழும்பு, நவ.1

ஜெனிவாவில் நடைபெற்றுமுடிந்த பேச்சுகள் அரசுத்தரப்புக்கே பெருவெற்றியாக முடிந்திருக்கின்றன. நிபந்தனையை விதித்து பேச்சைக் குழப்பியதன் மூலம் புலிகள் தரப்பு தோல்வியைத் தனதாக்கிக் கொண்டது.

ஜெனிவாவில் இருந்து நாடு திரும்பிய அரச பேச்சுக் குழுவின பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தபோது இவ்வாறு அவரிடம் தெரிவித்திருக்கின்றனர்.

பேச்சுக் குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் பேச்சுக்குழு உறுப்பினரான ரோஹித போகொல்லாகம ஆகியோர் நேற்று பேச்சின் பெறுபேறுகளை ஜனாதிபதிக்கு விளக்கினர்.

அதன்பின்னர் அலரிமாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நிமால் சிறிபாலடி சில்வாகூறியதாவது:-

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஜெனிவாவில் இடம்பெற்ற அமைதிப் பேச்சானது அரசிற்கு வெற்றியைத் தந்துள்ளது. புலிகளுக்குத்தான் அது தோல்வியாக அமைந்திருக்கும். சுமுகமாக இடம்பெற்ற பேச்சில் புலிகள் நிபந்தனை ஒன்றைப் புகுத்தியதன் காரணமாக அவர்கள் தோல்வியைச் சந்தித்துள்ளனர். அதனாலேயே பேச்சிலும் இணக்கம் காணமுடியவில்லை. புலிகள் ஒத்துழைத்திருந்தால் பேச்சு அழகாக முடிந்திருக்கும்.

நாட்டில் நிலவுகின்ற பல்வேறு பட்ட பிரச்சினைகள்பற்றி நாம் கலந்துரையாடினோம். மனித உரிமைகள், வடக்கு - கிழக்கில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் உடபடப் பல விடயங்கள் பற்றிப்பேசினோம்.

வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்கு புலிகளால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகள், புலிகள் முஸ்லிம்கள் மீது மேற்கொண்டுவரும் வன்முறை நடவடிக்கைகள்போன்றவைபற்றி விரிவாகப்பேசினோம்.

வடக்கு - கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பற்றியும் இப்பேச்சில் பேசப்பட்டது. இந்த விடயம் குறித்து புலிகள் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அதனால், இவ்விடயம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வில்லை. மேலோட்டமாகவே பேசப்பட்டது.

ஆனால், இரண்டாம் நாள் பேச்சு முடிவில் ஒரு பொது இணக்கம் ஒன்றை அப்பேச்சின் ஊடாகப் பெறமுடியாமல் போய் விட்டது. ஏ-9 பாதையை திறக்க வேண்டும்என்றும்அவ்வாறுதிறந்தாலேயேஅடுத்த கட்டப் பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்க நாம் இணங்குவோம் என்றும் புலிகள் நிபந்தனை விதித் ததனாலேயே இந்நிலை ஏற்பட்டது.

நிபந்தனைகளின்அடிப்படையில்பேசுவதில்லை என்று பேச்சுக்கு முன்பு புலிகள் இணங்கியிருந்தனர்.ஆனால்,பேச்சின்இறுதியில் அடுத்த பேச்சுக்கான திகதி நிர்ணயிப்பதில் புலிகள்நிபந்தனை விதித்துவிட்டனர்.

பேச்சு இணக்கம் இன்றி முடிவடைவதற்கு புலிகள்தான் காரணம். அரசு இணக்கம் ஒன்றை எட்டும் நோக்கில் தான் செயற்பட்டது. அதற்கமைவாகவே பேச்சை முன்நகர்த்தியது.

ஆகவே, பேச்சு தோல்வியில் முடிந்துவிட்டது என்றொரு கருத்து இப்போது நிலவியபோதிலும், அப்பேச்சு நிச்சயமாக அரசிற்குத் தோல்வியைத் தரவில்லை. பேச்சு முறையின் வரையறைக்கு உட்பட்டு நாம் நேர்மையாகச் செயற்பட்டதால் இப்பேச்சு அரசுக்கு வெற்றியைத்தந்துள்ளது. புலிகளுக்கு வேண்டுமென்றால் அது தோல்வியாக இருக்கலாம்.

இருப்பினும் தொடர்ந்தும் பேச்சு மூலம் தீர்வு காணப்படுவதில்தான் அரசு உறுதியாக இருக்கின்றது. நாம் ஒருபோதும் யுத்தத்திற்குச் செல்லமாட்டோம். அதனால், புலிகள் வலிந்து தாக்குதல் நடத்தினால் நாட்டின் பாதுகாப்புக் கருதி நாம் பதில் தாக்குதல் நடத்துவோம்.

அடுத்த பேச்சுக்கான திகதி நிர்ணயிப்பதிலேயே புலிகள் இணக்கத்தைத் தெரிவிக்கவில்லை. ஆனால், பேச்சுக்கு வரமாட்டோம் என்று அவர்கள் கூற வில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக் கதாகும் - என்றார் நிமால் சிறிபால டி சில்வா. (ஐ)

## வடமராட்சியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், நவ.1

வடமராட்சி, தும்பளை லூர்த்து மாதா ஆலயத்திற்கு அருகில் நேற்றுக் காலை 9 மணியளவில் இனந்தெரியாதவர்களால் குடும்பஸ் தர் ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான இராமலிங்கம் தவத்துரை (வயது-49) என்பரே சுடப்பட்டு மரணமானவர் ஆவார்.

கொலையுண்டவர் தனது வீட்டு வேலியை அடைத்துக்கொண்டிருந்த போது, மோட் டார் சைக்கிள்களில் வந்த ஆயுததாரிகள் இவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் மந்திகை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(115-173-155-203)

## தென்மராட்சியில் ஆசியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.01

தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கான ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர்திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார்.

(1)

# அரசின் இரட்டை வேடப்போக்கு
# ஜெனிவா பேச்சில்அம்பலமானது

## காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் கூறுகிறார்

ஜெனிவா,நவ.1

ஜெனிவா பேச்சு மூலம் அரசின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளது என தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இருந்து புறப்படமுன் இணையத்தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா பேச்சுவார்த்தையின் மூலம் எமது மக்களுக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும் சிறிலங்கா அரசினுடைய இரட்டை வேடம் அம்பலமாகிவிட்டது என்று நினைக்கின்றேன்.

சிறிலங்கா அரசானது சர்வதேச சமூகத்திற்கும் சிங்கள மக்களுக்கும் ஒன்றை கூறிக்கொண்டும் இங்கே ஜெனிவாவில் பேச்சுவார்தையில் வேறுவிதமாக பேசியும் எல்லாவற்றையும் குழப்பியுமுள்ளனர். அவர்கள் அரசியல் தீர்வில் அக்கறை கொள்ளாமல் இராணுவத் தீர்வினையே விரும்புகின்றனர் என்பது தெளிவாகி உள்ளது. ஆனால், அவர்களது விரும்பம் ஒருபோதும் சரிவரப்போவதில்லை.

இவ்வாறானதோர் இராணுவத் தீர்வை நோக்கி சிறிலங்கா அரசு முன்னர் சென்றுகொண்டிருந்த போதெல்லாம். புலம் பெயர்ந்த மக்கள் தான் எமக்குப் பக்கபலமாகவும் பின்புலமாகவும் இருந்து செயற்பட்டிருக்கிறார்கள். அதுபோன்று எமது புலம்பெயர் வாழ் மக்கள் தொடர்ந்தும் எமது போராட்டத்துக்கும் எமது மக்களுடைய அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்குமான சகல வேலைத்திட்டங்களிலும் முற்றுமுழுதான அர்ப்பணிப்புடன் பங்காளிகளாக மாறவேண்டும்.

ஏற்கனவே, அவர்கள் உதவிகளை செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். இருந்தபோதும் எந்த வொரு தனிமனிதரும் கூட அக்கடமையிலிருந்து அந்நியப்படாமல் ஒன்றுபட்டு எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முயற்சியில் அதிதீவிரமாக வேகமாக முழு வீச்சுடன் செயற்பட வேண்டும். இதனையே எமது தேசியத் தலைவர், தளபதிகள், போராளிகள், மக்கள் சகலரும் எதிர்பார்க்கின்றனர் - என்றரார்.

### டீஸல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் மூலம் குறிப்பிட்ட அளவு டீஸல் எடுத்துவரப்பட்டதை அடுத்து இந்தச் சேவைகள் நேற்று ஓரளவு வழமைக்குத் திரும்பின.

தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய அளவு டீஸலை எடுத்து வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் முழு அளவில் களஞ்சியப்படுத்துவதில் உள்ள சிரமங்கள் காரணமாக பகுதி பகுதியாகவே கொண்டுவரவேண்டியுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

ஒரு மாதத்துக்கு 50 லட்சம் லீற்றர் டீஸல் தேவைப்படுகின்றது என்றும் -

கப்பல் மூலம் முழு அளவு டீஸலை மொத்தமாக எடுத்து வந்து களஞ்சியப் படுத்த வசதி இல்லை என்றும் -

பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-1)

### யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார் என சில ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டன.

இந்த விடயங்கள் குறித்து கருத்துக் கேட்பதற்காக நேரடியாக அவரது கைத் தொலைபேசியுடன் தொடர்புகொண்டோம். அப்போது அவர் தாம் ஒரு முக்கியமான மாநாட்டில் இருக்கிறார் எனவும் சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் தொடர்பு கொள்ளுமாறு கூறினார்.

எனினும் அதன்பின்னர் அவரது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள பல முறை முயற்சித்த போதிலும் அது 'சுவிற்ச் ஓவ்' செய்யப்பட்டிருந்தது. (க)

### தாக்குதல்களை புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என நாம் புலிகளிடம் கேட்டோம். அதற்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. ஏ-9 பாதையைத் திறக்கவேண்டும் என்று சொல்லுகின்றனர்.

ஏ-9 பாதையின் ஊடாகத் தமது உறுப்பினர்களின் பயணத்தை மேற்கொள்ளவும் கப்பம் அறவிடுவதற்கும் புலிகள் முயற்சிக்கின்றனர். மக்களைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. ஆனால், மக்களின் நலனைக் கருத்திற்கொண்டுதான் அரசு செயற்படுகிறது.

இன்னும் பல கப்பல்களைப் பெற்று உணவு விநியோகத்தை மேலும் விரிவாக்க விரும்புகின்றோம். ஆனால், புலிகளின் தரப்பிலிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதால் மேலும் பல கப்பல்களைப் பெறுவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

இருந்தாலும், விநியோக நடவடிக்கை தொடரும். ஏ-9 பாதை இவ்வாறு தொடர்ந்தும் மூடிவைத்திருப்பது அரசின் திட்டம் அல்ல. இது தற்காலிகமான ஒன்றுதான். புலிகளால் ஏற்படுத்தப்பட்ட இந்நிலைமை சுமுகமான நிலையை அடைந்தால் இப்பாதையை நிச்சயம் திறப்போம் - என்றார்.

(ஐ)

### மியாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தமது அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் -

மற்றையவர்தமதுஆதரவாளர் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ராணுவத்தினர் ஊடுருவித் இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என புலிகள் தெரிவித்துள்ளனர். இராணுவத்தினர் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர். (1-12)

### மின்விநியோகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னுக்குத் தெரிவித்தன.

இன்று காலை 5 மணி முதல் 7 மணி வரையும் மாலை 6 மணிமுதல் 10 மணி வரையும் மின்விநியோகத்தை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் -

பகல் நேரத்தில் மூன்று மணிநேரம் விநியோகத்தை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-1)

### அத்தியாவசிய உணவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருவிப்பது சாத்தியமற்றது என்று விடயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

மேலும் தமிழ் நாட்டில்இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தருவிக்கப்படும்பட்சத்தில் அவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படுவது வரவேற்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகின்றது.

இத்தகைய ஒருசூழ்நிலையிலேயே யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் தமிழ் நாட்டில் பொருள்கள் கொள்வனவு செய்து இங்குகொண்டுவரும் வழிமுறை குறித்து இந்தியத் தரப்பில் இப்போது சாதகமாகப் பரிசீலனை செய்யப்படுவதாக அறியப் படுகின்றது.

பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேச குழு மற்றும் சர்வதேசஅமைப்புகளின் உதவியை நாடும் யோசனை ஒன்றும் உள்ளதாக அறியப்படுகின்றது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, சீனி, பருப்பு, பால்மா, குழந்தைகளுக்கான உணவு வகைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத் செல்ல இங்குள்ள சில தடைகளைத் தளர்த்தி உதவ புதுடில்லி அரசு விருப்பம் கொண்டுள்ளதாக சென்னைத் தகவல்கள் தெரிவித்தன.

தமிழ்நாட்டிலிருந்து மேற்படி உணவுப் பொருள்களின் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு இருக்கிறது. உள்ளூர்ச் சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உயர்வதை தடுக்கும் முகமாகவே ஏற்றுமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கை உட்பட ஒருசில நாடுகளுக்கு இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை அரசு தமிழகத்தில் இருந்து உணவுப் பொருள்களை கொண்டுவரும் விடயத்தில் பாதக உணர்ச்சிவசப்பட்ட நிலையில் உள்ளதால், அதன் விருப்பம் இன்றி இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவது சாத்தியமா என்பது கூர்ந்து ஆராயப்படவேண்டிய விடயம் ஒன்றெனவிடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ)

### யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்கள் மறிக்கப்பட்டு பூரண சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, ஆகிய பகுதிகளில் இருந்து நகரத்தை நோக்கி வந்த சகலரும் பரிசுத்துச் சோதனைக்கு ஆளாக்கப்பட்டனர்.

பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டு இச்சோதனை பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சோதனையின் போது எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை.

(அ-1-17-51-88-86-111)


விமான சேவை

யாழ். - கொழும்பு
விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின்
நான்கு பேர்
பயணிக்கத்தக்க
சிறு விமான சேவை
உத்தரவாதத்துடன்
நடைபெறுகின்றது.

மேலதிக
விவரங்களுக்கு
தொடர்பு:
0785788811,
0114964994,
FAX: 0112721789



கணக்கீடு
பாலிகளுன்
A/L 2007/2008
& DAY
PAPER CLASS
THU. - 3.30 - 5.30 p.m.
SAT: - 2 - 3 p.m.
ஆரம்பம் (02.11.2006) நாளை
RADIANT
அரியாலை.



கணக்கீடு
A/L 2008 வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று
பிரிவு I
ஆரம்பம் : நாளை 3 p.m.
பிரிவு II
ஆரம்பம் : சனி 1 p.m.
A/L Day Class
திங்கள் வெள்ளி 7 a.m.
ஆரம்பம் நாளை
S.தவா
NEW SCIENCE COLLEGE
JAFFNA


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org